
# தாமரை

2
அணா



# கேட்டீரா, சேதியை!

"தவலை போயிற்று" என்று எழுதுவதற்குப் பதிலாகத் "தலை போயிற்று" என்பதாக எழுதியவனின் கதை உங்களுக்குத் தெரியும்! இப்படிச் சின்னஞ் சிறு பிழைகள், எழுதுவதிலும் சரி, பேசுவதிலும் சரி எவ்வளவோ விபரீதங்களை உண்டு பண்ணிவிடுகின்றன. இதனால்தான், திருவள்ளுவப் பெருந்தகை சொன்னார் 'யாகாவாராயினும் நாகாக்க!' என்பதாக. ஒரு செய்தியை எழுது முன்னும், பேசு முன்னும் சிந்திக்க வேண்டும். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு, "எப்போதும் முதன் முதலில் செய்த யோசனையைவிட, இரண்டாவதாக உண்டாகிற யோசனையே உன்னதமானது" என்பதாக. அவசரத்தில் மிகப் பெரியவர்களும், வாய்ப்பை இழந்துவிட்டு பிறகு வருந்தப் படுவதுண்டு! வாளைச் சுற்றி ஒருவரைத் தாக்கினால், தாக்கிய பிறகு அந்த வாளை எடுத்து உறைக்குள் போட்டுக்கொள்ள இயலும்; ஆனால், வாய்வீச்சை ஒரு நாளும் திருப்பிப்பெற முடியாது. கல்லடியைக்கூட மறந்துவிடலாம்! சொல்லடியை மறப்பதென்பது இயலாதல்லவா?

* * *

சாதாரண மக்களுக்கே, இந்த நல்லுரைகள் தேவைப்படும்போது, அரசுகளை ஆள்வோருக்கு எழுதுவதிலும் பேசுவதிலும் முன்னெச்சரிக்கை மிகமிகத் தேவையாகும். அதனால்தான், அரசுத்தலைவர்கள், எந்த விஷயத்தையும் நன்கு பரிசீலனை செய்த பின்னரே வெளியிடுவார்கள். இந்தியத் துணைகண்டத்துக்கு வந்த ரஷியத் தலைவர்களில் குருஷேவ், எதைப்பற்றியும் தயவு தாட்சண்யமின்றி வெளியிட்டார்; ஆனால், புல்கானின் வார்த்தைகளை எண்ணி யெண்ணித்தானே பேச வேண்டி இருந்தது.

* * *

ஜப்பானியப் பிரதமர் ஹடயாமா, கடந்த 2-ந் தேதி பார்லிமெண்டில் வருங்கால யுத்தங்களில் ஜப்பானின் பங்கு என்னவாயிருக்கும் என்பதுகுறித்து விளக்கம் தந்து கொண்டிருக்கையில், 'படையெடுக்கும்' என்கிற ஒரு சொல்லை அவசரமாகச் சொல்லிவிட்டார். ஒரு சொல்தான்! ஆனால், அது உண்டாக்கும் அர்த்தங்கள் எத்தனை

அதைக் கேட்ட, எதிர்க்கட்சியினர் பேசாமலிருந்துவிடவில்லை — நமது உறுப்பினர்களைப் போல. பிரதமரையே சூழ்ந்துகொண்டனர். "அடிக்கடி இப்படி வாய்தவறி வார்த்தைகளைக் கூறுகிற இவரால் ஜப்பானுக்கே இழுக்கு உண்டாகிறது. இப்படிப்பட்டவர் நாடாளவே அருகதையில்லை. உடனே ராஜினாமா செய்யும்" என்று முழக்கமிட்டனர். ஹடயாமாவால் ஒன்றும் பதிலளிக்க முடியவில்லை. திணறினார்; திண்டாடினார். சபையை விட்டுத் தப்பலாம் என்றாலும், அதற்கும் இடம்கொடுக்கவில்லை, எதிர்க் கட்சியினரான சோஷியலிஸ்டுகள்! கடைசியில், போலீசை வரவழைத்து, தப்பவேண்டியதாயிற்று அவர்.

* * *

இந்தியா, பிரிட்டனின் பிடியில் சிக்கியிருந்தபோது சர்ச்சில், காந்தியாரைப்பற்றி 'அரை நிர்வாண பக்கிரி' என்று சொல்லிவிட்டார். அடடா! அந்த ஒரு சொல், இங்குள்ள தேசியத் தோழர்களை, சீற்றம்கொள்ளச் செய்தது மட்டுமல்ல; இன்றுகூட, சர்ச்சில் என்றால் தங்களது விரோதி என்று கருதக்கூடியவர்களும் இருக்கிறார்கள். பழைய கதை ஏன்? அகில உலகமே போற்றும் நேரு பண்டிதர் நம்மைப்பார்த்து, 'நான்சென்ஸ்' என்று கூறியதால், தன்னுடைய பெருமைக்கு எவ்வளவு இழுக்குத் தேடிக்கொண்டார்!

* * *

155 என்று இருக்கவேண்டியது 55 என்று தவறுதலாக அச்சிடப்பட்டுவிட்டதாம்! வேறு எங்குமல்ல இந்திய சர்க்காரின் 'பட்ஜட்' தயாரிப்பில். வெளிநாட்டிலிருந்து வரும் விஸ்கிபோன்ற மதுவகைகளுக்கு 155 மடங்கு தீர்வை விதிக்கப்படும் என்பது 55 மடங்கு விதிக்கப்படும் என்று அச்சேறிவிட்டதாம். அதனால், பொக்கிஷத்துக்கு எவ்வளவு வருமான நஷ்டம் ஏற்படும்! இந்தத் தவறை, 'பட்ஜட்' சமர்ப்பிக்கப்பட்ட பிறகே, கண்டு பிடித்திருக்கிறார், டில்லி நிதியமைச்சர். இதைத் திருத்துவதற்காகத் தனியாக ஒரு சட்டம் கொண்டுவரப் போவதாகவும் அறிவித்திருக்கிறார். சிறு பிழைதான்! ஆனால் அதனால் ஏற்படும் நஷ்டமும் அவமானமும் சாதாரணமானதா! இதைக் குறிப்பிட்டு நமது பார்லிமெண்டு உறுப்பினர்கள், 'ஜப்பானை' உண்டாக்கவில்லை, இங்கே. "ஐயா நிதியமைச்சரே, இப்படி ஏன் உமது இலாகா பொறுப்பற்று இருக்கிறது!" என்று கேட்கவில்லை. இங்கேதான் 'பட்ஜட்'டே தெருவீதிகளில் விலை கூறி விற்கப்பட்ட அதிசயம் நிகழ்ந்த பின்னும் ஆட்சியிலமர்ந்திருக்கிறாரே, அவர்!

* * *

நமது நிதியமைச்சர் சுப்ரமணியம் இருக்கிறாரே, இவரும் தவறு செய்தார், முன்பு. வன்னிய குலத்தவர்களில் குற்றப் பரம்பரையினருக்கு மட்டும் சம்பளச் சலுகை அளிப்பதென்பது சர்க்காரின் திட்டம். ஆனால், அந்தச் சலுகையை எல்லாருக்கும் கொடுக்கும்படி உத்தரவு கிளம்பிற்று சர்க்காரிடமிருந்து. உண்மையில், சர்க்காருக்கு அந்த நோக்கம் கிடையாது— ஆயினும் உத்தரவு கிளம்பவே ரூபாய் **2-லட்சம்** செலவழிந்தது. இதனைக் கண்டு பிடித்து சட்டசபையில் கேட்டபோது "நான் கவனிக்காமல் கையெழுத்துப் போட்டுவிட்டேன்" என்றார் சுப்ரமணியம்! இப்படி, அவசரமாகப் பேசவும், ஆலோசிக்காமல் கையெழுத்திடவுமான 'ஆள்வோர்' நமக்குக் கிடைத்திருக்கிறார்கள். சாதாரணமானவர்களுக்கே வாக்கிலும் கையிலும் சர்வஜாக்கிரதை வேண்டும் என்பார்கள்! ஆனால் பல கோடி மக்களை யாளும் மகானுபாவர்களுக்கு, இரண்டும்—ஓட்டை! இதனால், பணமும் மானமும் அழிகிறது, அழிந்துகொண்டேயிருக்கிறது. எழுத்திலும் பிழை! பேச்சிலும் பிழை! சே சே, என்ன சுதந்திரமோ, நமக்குக்கிடைத்தது.

ஆண்டுச் சந்தா ரூ. 7

மலர் 14
இதழ் 37
18—3—56

# ஆளைக் காட்டியது போதும்!

கக்கனைப்பார்! என்று காட்டுகிருர், காமராஜர். இதோ, திருச்செங்கோட்டுப் பிரதிநிதி, எங்க ளுரைப் பாரீர் என்று அழைக்கிருர், எம். எல். ஏ. க்களை.

சிவசண்முகம் எங்கேயிருக்கிருர், தெரியுமா?— என்று, கேட்கிருர்கள், காங்கிரஸ்காரர்கள்.

திருச்செங்கோட்டில் ஒரு ஆதித்திராவிடருக்கு இழைக்கப்பட்ட அநீதி தெரியுமா என்று கேட்கிருர், எம். எல். ஏ. யான தோழர் அர்த்தநாரி சட்ட சபையில்.

கோயில் இலாகாவுக்கே, ஆதித்திராவிடரை மந்திரியாக்கியிருக்கிரோம்—என்று தோழர் பரமேஸ் வரனைக் காட்டுகிறது, சர்க்கார். அனைவரும் இறங்கிக் குளித்த, 'மகாமகம்' குளத்தில் மூழ்கி பாபங்களைக் கழுவிக்கொண்டேன் தெரியுமா?—என்று ஆனந்த மாகக் காட்சியளிக்கிருர், அவர். ஆனால், அவரது சமூகத்துக்கு அநீதி இழைக்கப்பட் டிருக்கிறது என்று ஆத்திரத்துடன் கேட்கிருர் திருச்செங்கோட்டார் — அன்பர் பரமேஸ்வரனின் 'பாபம்' போயிருக்கக்கூடும் ஆனால், அவரது இனத்தவர்களின் காலையும் தலையையும் ஆண் டாண்டு காலமாகச் சுற்றிக்கொண்டிருக்கும், 'சாபம்' நகர்ந்ததாகத் தெரியவில்லையே, என்று அறிவிப்பதுபோல.

கவர்னர்பிரான், திருச்செங்கோட்டுக்குச் சென் றிருந்தபோது, பஞ்சாயத்து உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து புகைப்படம் எடுத்துக்கொண்டனராம். அதில் பொதுமக்களின் பிரதிநிதி எனும் வகையில், ஆதித்திராவிடத் தோழர் ஒருவருக்கும் இடமளிக்கப் பட்டதாம்.

'மாடு தின்னும் புலையா, உனக்கு மார்கழித் திருநாளோ!' என்று நந்தனார் கதையில் கேட்டா னுமே ஒரு ஐயன், அதைப்போலக் கேட்காமல், உயர் சாதிக்காரர்கள், கவர்னரோடு படம் எடுத்துக்கொண்ட ஆதித்திராவிடச் சகோ தரரை அவமானப்படுத்தி இருக்கிருர்கள். புகைப் படத்திலிருந்து, அவருடைய உருவமட்டும், அழிக் கப்பட்டிருக்கிறதாம்.

சிந்தையில் தேள் கொட்டியதுபோலிருந்தது, இச் செய்தியை ஏடுகளில் படிக்க. கவர்னர்பிரான் மறுப்புரை விடுப்பார்—காமராஜர், திறவாத வாயைத் திறப்பார் — என்று எதிர்பார்த்தோம்—இது, நாள் வரையில், எதையும் காணோம்! இந்த இலட்சணத் தில், தீண்டாமை ஒழிப்பு, மிக மும்மரமாக நடை பெறுவதாகச் செப்பப்படுகிறது!!

வெறும் துப்பாக்கிமட்டுமிருந்தால், போதுமா, புலியை விரட்ட? துப்பாக்கியேந்தியவனின் கரத்தில் வலிவும், கருத்தில் தெளிவும், இருக்க வேண்டும். ஆனால், நமது சர்க்காரிடம், சட்டங்கள் இருக் கின்றன, வண்டி வண்டியாக. ஆனால், அவைகளைக் கொண்டு, தீண்டாமைக்கு ஒரு முடிவு தேட முடிய வில்லை.

தீண்டாமையைப் பேய் என்பதாலோ, பிசாசு என்று வர்ணிப்பதாலோ, பாஷ்யமய்யங்கார் தலைமை யில் ஒரு சங்கம் அமைப்பதாலோ, இந்த சமூகக் கொடுமைக்குப் பரிகாரம் கண்டுவிட முடியாது. ஏனெனில், தொன்று தொட்டு இருந்து வரும், இத் துயரினைப் போக்கிட நகரங்களிலும் பட்டிணங்களி லும் இருக்கிற சாத்தியக் கூறுகளை விடக் கிராமங் களில் மிகமிகக் கொஞ்சம்.

தேளும் நண்டுவர்க்களியும் நடமாடும் கூடங் களாகும் நமது கிராமப்புறத்துப் பறச்சேரிகள்! அவைகள் ஒழிக்கப்பட்டு, முதலில், உயர்சாதிக்காரர் கள் என்போருடன் சரிசமமாக வாழும் உரிமையும் வசதியும் உண்டுபண்ண வேண்டும்.

டில்லி, உள் நாட்டுத்துறை அமைச்சரான பி. என். தத்தார் என்பாரே, கூறுகிருர்:

"சட்டப்படி தீண்டாமை ஒரு குற்றமாக ஆக்கப் பட்டிருக்கிறது. ஆனால் பல்வேறு மாகாணங்களில் இருந்து அண்மையில் கிடைத்துள்ள தகவல்களோ, நாடெங்கும் குறிப்பாகக் கிராமப்புறங்களில் தீண்டாமை வழக்கத்திலிருந்து வருகிறது. எனவே இச்சமுதாயக் கொடுமையை ஒழிக்கச் சட்டம் மட்டும் போதாது. சாதி இந்துக்கள் அரிசன மக்களைத் தங்களுக்குச் சமத்துவமான முறையில் நடத்த முன்வர வேண்டியது மிக அவசியமாகும்"

காமராஜரின் கவனம் அந்த வகையில் திரும்பியதா, ஏதாவது செய்துள்ளதா என்று பார்த்தால் எதுவும் காணோம்! ஆளைக்காட்டி மக்களை மயக்கும் அதே முறைதான், இந்த விஷயத்திலும் கையாளப்பட்டு வருகிறது!!

ஆனால், இதே சமயத்தில், பக்கத்திலிருக்கும் ஆந்திரம் தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமாக சில முக்கிய முடிவுகளைச் செய்திருப்பதாக, கர்னூலி லிருந்து கடந்த திங்கள் 7ம் நாள் வந்த செய்தி கூறுகிறது.

**ஒவ்வொரு ஆதித்திராவிடப் பையனை எடுத்து வளர்க்க முன் வரும் ஒவ்வொரு இந்து குடும்பத்தினருக்கும் ஒவ்வொரு ஆண் டும் ரூபாய் 500 செலவுக்கென்று அளிக்கப்படும்.**

**ஒவ்வொரு மாவட்டத்திலும் முதன் முதலில் ஒரு மாடல் காலனி அமைக்கப்படும். அதில் நூற்றுக்கு 75 ஆதித்திராவிடக் குடும்பங்களும், 25 உயர் சாதி யென்போரும் சேர்ந்து வாழும் படிச் செய்யப்படும். ஒவ்வொரு காலனியும் ரூ. 1,30,000 செலவில் அமைக்கப்படும்.**

சமூகத்திடையில், தாழ்த்தப்பட்டோருக்கும் நல்வாழ்வு கிடைக்கச் செய்ய வேண்டுமென்றால் சிலரை உயர்ந்த உத்தியோகங்களில் அமர்த்துவதால் மட்டும் முடிந்துவிடாது.

புள்ளி மான்களில் ஒன்றிரண்டை மட்டும் புலி வாழும் காட்டிலிருந்து கொண்டுபோய் நந்தவனத்தில் உலவ விட்டு, பார் அதன் அழகை! கொண்டு வந்தவன் நான்! என்று கூறுவதால் புள்ளிமான்களின் கூட்டமே தப்பி விட்டதாகக் கருதிவிட முடியாது.

"அவரைப் பார்! இவரைப் பார்!" என்று ஒருசிலரைக் காட்டி அந்தச் சமூகத்திற்கு உண்டாக்கப்பட்டிருக்கும் களங்கத்தைப் போக்கி விட்டதாகக் கருதிவிடக் கூடாது; காமராஜர். உருப்படியான சில காரியங்களைச் செய்து, அந்தச் சமூகக் கொடுமைக்கு தன்னாலான பரிகாரத்தைச் செய்ய வேண்டும்.

பீகாரில், கலப்பு மணம் செய்து கொள்வோருக்குப் படிக்க வசதி அளிக்கப்படும் என்றோர் முடிவு செய்திருக்கிறார்கள். ஆந்திரமும், சில வழி முறைகளை வகுத்திருப்பதாக அறிவிக்கிறது. சென்னையும், சில உருவான வழிகளை வகுக்க வேண்டுமென விரும்புகிறோம். மதுராந்தகத்துக்கு அருகில் பேசிய அமைச்சர் பரமேஸ்வரன், தாழ்த்தப்பட்டோர் மாட்டு சர்க்காருக்கு அதிகக் கவனமிருப்பதாகவும் அவர்களுக்கு வீடுகட்டிக்கொள்வதற்காக ரூ 450-கொடுக்கும் திட்டமிருப்பதாகவும் கூறியிருக்கிறார். கவனமிருப்பதாகவும், திட்டமிருப்பதாவும் சொல்லிக்கொண்டிருந்தால் போதாது! இதனால், தங்களுக்கும் சிரத்தையிருப்பதாகக் காட்டிக்கொள்கிறார்கள் என்று மக்கள் மன்றம் கருதுமேயொழிய, பேச்சைச் செயலாக்கவேண்டும்.

உண்மையில், வீடுகட்டிக்கொள்ள பணம்கொடுக்கும்யோசனையிருந்தால், அப்படிச் செய்வதற்குப்பதில் ஆந்திரத்தில் செய்வதுபோல ஆங்காங்கும் பொது 'காலனி'களை உண்டாக்கி, அதில் 'சாதி இந்துக்கள்' எனப்படுவோரும் சேர்ந்து வாழும் முறையினைப் புகுத்தவேண்டும்.

அதோடு, தாழ்த்தப்பட்டோரைப் பிரிக்கின்ற வகையில் இல்லாமல், சர்க்கார் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் அவர்கள் ஆண்டாண்டுகாலமாக அனுபவித்துவரும் தீமைகளை அகற்றுவதாக அமைய வேண்டும்.

அத்தகைய, வழிமுறைகள் காமராஜர் ஆட்சியில், செய்யப்படுமா! அல்லது,பத்தோடுபதினொன்று அத்தோடு இது ஒன்று என்று பேச்சளவோடு நின்றுவிடுமா!!

★

# ஒன்றை மறந்துவிட்டார்கள்!

மாவ்லங்கரின் பிரிவு காரணமாக டில்லி பார்லிமெண்டுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அனந்தசயனம் அய்யங்காரைப் பற்றி சபையில், பாராட்டிப் பேசிய பலர் ஒரு விஷயத்தை மறந்து விட்டார்கள்.

பிறர் மறந்தாலும் கூட, இந்து சமூகத்தின் உன்னதத்துக்காகப் பாடுபடும் தாண்டன் போன்றோரும் கூட மறந்திருக்கிறார்கள். இந்தியாவின்முப்பதுகோடிக்குமேற்பட்ட மக்களின் சபைக்குத் தலைவராக அமர்ந்திருக்க அவரை காங்கிரஸ் கட்சியினரே தேர்ந்தெடுத்தார்கள். அவரும் தன்னை ஒரு காங்கிரஸ்காரர் என்று சொல்லிக் கொள்கிறார். ஆனால், இன்னும் அய்யங்கார் பட்டத்தை விட்டதாகத் தெரியவில்லை!

பட்டத்தை விடாததுமட்டுமல்ல, கடந்த பிப்ரவரி 9-ந்தேதி பம்பாயில் அரிய பெரிய செயலொன்று செய்தார். டிரினிடாட் எனுமிடத்துக்குச் சென்றிருந்த அவர், விமான மூலம் வந்திறங்கினார் பம்பாய்க்கு. "நாம் தான் பார்லிமெண்டு துணைதலைவராயிற்றே. யார் நம்மைக் கேட்க முடியும்?" என்ற எண்ணமோ, என்னவோ, டாக்டர் சர்டிபிகேட் இல்லாமல் வந்து இறங்கினார். விமானப்பிரயாணம்செய்வோருக்கு வெளிநாடுகளிலிருந்து அவர்கள் வரும்போது, அவசியம் டாக்டர்சர்டிபிகேட் வைத்திருக்க வேண்டும். அது இல்லாததால், பம்பாய் விமான நிலைய அதிகாரிகள் அவரை வெளியிலனுப்ப மறுத்து ஒருவாரம்உள்ளேயேவைத்து விடுவோம் என்று கூறி விட்டார்கள். அய்யங்காருக்குப் பிரமாதமான கோபம்! உடனே, டில்லிக்குப் 'போன்' செய்தார். நேருபண்டிதர் என்ன செய்யமுடியும்? விமான அதிகாரிகள், மிகச்சாதாரணமானவர்கள் என்றாலும் சட்டத்தை அல்லவோ காட்டுகிறார்கள்! அதனால், எதுவும் செய்ய இயலவில்லை. ஐந்து நாட்கள், விமான நிலையத்திலேயே அடைப்பட்டுக் கிடந்திருக்கிறார். ஆத்திரம், எவ்வளவு அலைமோதியிருக்கும் அவர்மனதில். அதிகாரிகளைப் பார்த்து, "ஐயா! இப்படி என்னை அடைத்து விட்டீர்களே? எங்கம்மாவுக்கு பிப்ரவரி 9-ம்தேதி சிரார்த்தமாச்சே! சிராத்தம்செய்யா விடில், ஆத்மா சாந்தியடையாதே" என்று ஒரு குண்டை எடுத்துவீசியிருக்கிறார். அதிகாரிகள், "அப்படியா! சிரார்த்தம்தானே செய்ய வேண்டும்?" என்றுசொல்லி அவர் அடைபட்டுக் கிடந்த இடத்தில், அதற்கான வசதிகளை யெல்லாம் செய்துகொடுத்துத் திவசம் புரியச் சொன்னார்களாம். இந்தஅரிய செய்தியையும்எடுத்துக்கூறி, அவருக்குள்ள இந்துமதாபிமானம் குறித்தும் பாராட்டியிருக்கலாம், சபையில்!! மறந்துவிட்டார்கள் போலும் உலகுக்கு, 'பாரதம்' தேர்ந்தெடுத்திருக்கும்விவேகியைப்பற்றி அறிந்துகொள்ளும் அரிய வாய்ப்பு போய்விட்டது!!

'குவாரன்டைனில்' அடைபட்டுக் கிடந்த அனந்தசயனரின் அம்மாவுக்குச் சிரார்த்தம் செய்ய வசதி செய்து கொடுத்தார்களே, அதிகாரிகள்—அதுபோல சாதாரணச் சிறைகளில் அடைபட்டுக்கிடக்கும் கைதிகள் எத்தனைபேர், இறந்துபோன அம்மா அப்பாவுக்குச் சிரார்த்தம்செய்ய வேண்டியவர்கள் உள்ளனர். அவர்களுக்கும் இந்த 'வசதி'யைச் செய்து கொடுக்குமா, அரசாங்கம் என்று கேட்கிறான், நமது அலுவலகச்சிறுவன். அப்படி ஒரு சட்டம் வந்தால், நிச்சயம் நமது பத்திரிகைகள், தீவிரமாக ஆதரிக்கும் என்புது மட்டும் நிச்சயம். ஏனெனில், 'சிரார்த்தம்' செய்யும் சான்ஸ் கிடைத்தால், அதிர்ஷ்டம் 'அவாளுக்குத்தானே!!

★

# கிளிக்குப் பச்சை பூசுவதா...?

**தம்பி!**

எங்கிருந்து வருகிறீர்? என்று கேட்டேன், நமது துணைப் பொதுச்செயலாளர் நடராசன் அவர்களை.

சூலூரிலிருந்து வருகிறேன் என்றார் அவர்.

நான் வேடிக்கையாக அவரைக் கேட்டேன்; "அதென்னய்யா அப்படிச் சொல்கிறீர்? நீர்மட்டுந்தானா, சூலூரிலிருந்து வருகிறீர்—நாமெல்லோருமே சூலூரிலிருந்துதானே வந்திருக்கிறோம் என்றேன் — கருவில் உருவாகிவந்த காதையல்லவா, அதனால் அவரும் உடனிருந்தோரும் சிரித்தனர்.

அதுசரி, சூலூரிலிருந்து கிளம்புகிறோம், பிறகு நாம் செல்லுமிடம் எது? கூறும் என்றேன், குறும்புக்காக. அன்று என்னவோ ஒருவிதமான மகிழ்ச்சி. மாநில மாநாட்டுக்காக நல்லதோர் திடல் கிடைக்க இருக்கிறது, அதற்கான 'உத்தரவு' பெற, மாவட்டக் கலெக்டரைத் துறையூர் சென்று காணப் புறப்படுகிறேன் என்று நண்பர் அம்பில் தர்மலிங்கம், அப்போதுதான் கூறிவிட்டுச் சென்றார், அதனால் ஏற்பட்ட குதூகலம் என்று எண்ணுகிறேன்.

நண்பர் நடராசன், பதில் ஏதும் கூறவில்லை—வழக்கமாக அவரிடம் வெளிப்படுமே ஒருவிதமான வெறிச்சென்ற பார்வை, அதனைச் செலுத்தினார், நான் விடவில்லை.

"சொல்லுமய்யா, சூலூரிலிருந்து புறப்பட்டு வருகிறோம், பிறகு......" என்றேன்.

அவர் பதிலளிக்காதது மட்டுமல்ல, என்னிடமிருந்தே அதற்கான பதிலை எதிர்பார்த்தார்.

சூலூரிலிருந்து (கருவிலிருந்து) புறப்பட்டு பாலூர் (அன்னையின் அன்புப் பாலூட்டப் பெறுகிறோம்) செல்கிறோம், பிறகு முறைப்படி வளர்ந்து வளர்ந்து, வேலையூர் (தொழில் செய்தல்) செல்கிறோம், அங்கு பக்குவம் பெற்ற பிறகு சேலையூர் (திருமணம்) சென்று இன்புறுகிறோம், பிறகு வசதியூர் தேடுவதிலே ஈடுபட்டு ஈடுபட்டுக் கடைசியில் சுடலையூர் சென்று அமைதி பெறுகிறோம் — என்று நான் கூறினேன்.

"என்ன அண்ணா! பெரிய தத்துவம் பேச ஆரம்பித்துவிட்டீர்கள்—வேதாந்தம் பேசுகிறீர் — என்று நடராசன் கேட்டார். கருவிலிருந்து கிளம்பி கல்லறை வரை நடத்தும் பயணத்தையும் அந்தப் பயணத்தில் பொதிந்துள்ள தத்துவத்தையும் விளக்கவே, நான், சூலூரிலிருந்து நாமனைவரும் புறப்பட்டுச் சுடலையூர் பயணமாகிறோம் என்று சொன்னதாக அவர் எண்ணிக்கொண்டார். ஆனால் தம்பி, நான் வேதாந்த விசாரத்தில் அப்போது மூழ்கியுமில்லை. நான் பேசியதும் தத்துவம் அல்ல; இலக்கணத்தில் மனம் செலுத்திக்கொண்டிருந்தேன்.


சூலூர்
பாலூர்
வேலையூர்
சேலையூர்
வசதியூர்
சுடலையூர்

இப்படி 'ஓசை' நயம், கருத்தை செய்துகொண்டிருந்தேன் - [illegible] நமது கழக வளர்ச்சி கண்டு அகத்தில் குடைச்சலும் முகத்தில் கடுகடுப்புங் கொண்ட யாரோ ஒருவர், தமிழில் அடுக்குமொழி பேசிப் பேசி மக்களை மயக்கி விடுகிறீர்கள், அப்பாவி மக்களும் ஓசை நயத்தில் மயங்கி உள்ளத்தைப் பறிகொடுத்துவிடுகிறார்கள், அதனாலேயே, உங்களால், 'கூட்டம்' சேர்த்திட முடிகிறது, என்று ஏளனம் பேசினாராம். அதைக் கேட்டுக் கடுங்கோபம் கொண்ட தம்பி ஒருவர் "அண்ணா! இவ்விதமெல்லாம் பேசுகிறார்கள்" என்று கூறிக் குறைபட்டுக்கொண்டார்; அதனால் என் மனம், அடுக்குமொழி, இரட்டைக் கிளவி, எதுகை மோனை ஆகியவற்றின் எழில், பயன், மீது சென்றது; அதே நேரத்தில் சூலூர் எனும் இடத்திலிருந்து வருகிறேன், என்று நண்பர் நடராசன கூறினர்; உடனே

சூலூர்
பாலூர்
வேலையூர்
சேலையூர்
வசதியூர்
சுடலையூர்

என்றெல்லாம் பேசலானேன்.

ஓசை நயம் தேடுவதும் தருவதும் குற்றமல்ல, இசைக்கலையே ஓசை நயத்தைத் தரப்படுத்தித் தரப்படுவதுதானே! ஆனால் சிலர், ஓசை நயம் என்பது ஏதோ ஓர் இழுக்கான செயல் போலவும், அதன் பயனாக மாபெருங் கேடு மனிதஇனத்துக்கு ஏற்படுவது போலவும் பேசுவர். ஆராய்ந்து பார்த்தால்அவர் தம் போக்குக்



குக்காரணம் கோபம்என்பதும், அந்தக்கோபத்துக்குக் காரணம் கவலை என்பதும், கவலைக்குக் காரணம், அவர்கள் ஓசைநயம் காட்ட முயன்று ஏற்பட்ட தோல்வி என்பதும் விளங்கிவிடும்.

வீட்டிலே, சின்னத் தம்பி இருந்தால், அவன் எதிரில், ஊதுகுழல் கொண்டு இசை எழுப்பிப்பார்—சிறுவன்சிரித்துமகிழ்வான், சிட்டுப்போலே பறப்பான், எனக்கு, எனக்கு—என்று கொஞ்சுவான், கொடுத்தால், ஊதிப்பார்ப்பான் ஓசைநயம் கிடைக்காது, ஒவ்வொரு முயற்சியும் ஒவ்வொரு ஓசைக் கொலையாகும், தோல்வி கண்டு துயருற்று, கோபமுற்று, ஊதுகுழலை ஓங்கிப் பூமியில் அறைவான்.

மொழியில் ஓசைநயம் பெறவும் காட்டவும் முயன்று, முடியாததால் கவலைகொள்பவர்கள், கோபம் கொண்டு, தமக்குத் துணைவர மறுக்கும் ஓசைநயம், பிறரிடம் பேரன்பு காட்டுவது கண்டு பெருங்கோபம்கொண்டு, ஓசைநயம் என்பதே தவறானது, தீதானது, என்று தூற்றத் தொடங்குவர்.

காதல் கைகூடாவிடத்து தென்றல் தேள் கடியாகும், நிலவு தீயாகச் சுடும், மலரே முள்போல் தைக்கும் என்கிறார்களல்லவா! காதல் மட்டுமல்ல, எது கைகூடாவிட்டாலும் கடுப்புஏற்படுவதும் அந்தக்கடுப்புக்குக் காரணமாகக்கடுங்கோபம் மூள்வதும், அதன் விளைவாகக் கடுஞ்சொற்கள் கிளம்புவதும், நிரம்பக் காண்கிறோம். அந்த முறையில் தான், தமிழின் இனிமையை ஓசைநயத்தின் வழியாகக் காட்ட முயன்று, தோற்பவர்கள், அந்த முறையில் வெற்றி கண்டோரைக் காணும்போது கொதிப்புற்றுச் சுடுசொல் வீசுகின்றனர்.

தம்பி, சம்பத்திடம், சில ஆண்டுகளுக்கு முன்பு ஒருவர் வேடிக்கைக்காகக் கேட்டாராம், "என்னடா சம்பத்து, உங்கள் அண்ணாத்துரை, அடுக்குமொழி பேசுகிறான்—எதற்காக? அடுக்குமொழி பேசினால்தான் இயக்கம் வளருமா? சீனியும் பாதாமும் சுவைதராதா, அதனைக் கூட்டிக் கலக்கி 'ஜிலேபி'யாக்கினால் மட்டுந்தான் இனிப்பளிக்குமா? அதுபோல், இயக்கக் கொள்கைகளை, மெருகு மெட்டு இல்லாமல், உள்ளதை உள்ளபடி சொன்னால் உண்மை விளங்காதா, அதைவிட்டு, அதனை அழகுபடுத்துகிறேன், சுவை கூட்டுகிறேன், அடுக்குமொழி தருகிறேன், ஓசைநயம் காட்டுகிறேன் என்று ஏன் உங்கள் அண்ணா கூறித் திரிகிறான்?'" என்று கேட்டாராம். சம்பத்து, "சரிதானய்யா, 'ஜிலேபி'யைச்சரியானபடி செய்யத் தெரிந்தவர்கள் செய்துதரட்டுமே, அதனால் என்ன? உங்கள் சீனியும் பருப்பும், 'ஜிலேபி' வடிவம் எடுப்பதால்,சுவை கெட்டாவிடுகிறது?" என்று திருப்பிக் கேட்டிருக்கிறான். அந்தப் பெரியவர், சம்பத்தின் வாதத் திறமையைக் காண்பதற்கே கேள்வி கேட்டவர், வயிற்று வலிக்காரரல்ல, எனவே அவர், மகிழ்ச்சியுற்று, முதுகில் தட்டிக் கொடுத்து பொல்லாத பயல்! போக்கிரிப்பயல்! என்று செல்லம் பொழிந்தார்.

ஓசை நயம் குறித்து நம்மீது குறை கூறுவோர், நம்மைக் குறை கூற இதுவரையில் ஓராயிரம் காரணங்களைச் சிரமப்பட்டுத் தேடித் தேடி அலுத்தவர்கள்—ஒவ்வொன்றும் கிளம்பும் வேகத்தைவிட அதிக வேகமாக மடிந்தொழியக் கண்டு மனவேதனையுற்றவர்கள். எனவே அவர்கள், மொழியை நாம் கையாளும் வகைபற்றிக் குறை கூறிப் பேசுவது குறித்து நாம் கவலைகொள்வதற்கில்லை. குழலும் யாழும் குழந்தையின் மழலையின் இனிமைக்கு ஈடா என்று கூறினவர் வள்ளுவர், அடா! அடா! காது குடைகிறது, ஏன்தான், இதுகள் கழுதைபோலக் கத்துகின்றன, கோட்டான்போலக் கூவுகின்றன என்று குழந்தைகளைப் பேணி வளர்ப்பதில் பொறுமையும் திறமையும் அறியாதவர்கள் அலறக்கேட்கிறோம்; கவலையா கொள்கிறோம்; இல்லை, இல்லை, கைகொட்டிச் சிரிக்கிறோம்.

முரசொலி, வீரர்க்கு மகிழ்ச்சி அளிக்கிறது, வீணில் உண்டு கொழுத்து இருப்போருக்கோ! ஐயோ! முரசு அறைகிறார்களே, போரல்லவா மூளும்போலிருக்கிறது, என்று திகில் பிறக்கிறது, எனவே, அவர்கள் முரசு முழங்கும்போது அதிலே ஓசை நயம் காண்பதில்லை,

சதங்கைச் சத்தம் கேட்டதும், சாலைக்கும் சோலைக்கும் அதற்குள் பல நூறுதடவை நடந்து நடந்து அலுத்துப்போய்ச் சலித்துக்கொண்டுள்ள காதலன், புன்னகை கொள்கிறான், காதலிவருகிறாள், ஓசை நயம் அதனைத்தான் அறிவிக்கிறது, என்று. காதலிக்குப் பதிலாக வேறோர் காரிகை அங்கு வந்து, தந்தை தடுத்துவிட்டார், தத்தை இன்று வரமாட்டாள் — என்ற செய்தியை அளித்தால், ஓசை நயத்தின் விருந்துண்டவனே வேம்பு தின்றவனாகிறானல்லவா!

ஆலயமணியோசை, ஆலைச் சங்கொலி, சோலைக் குயிலின் கூவல், காலையில் காகம் கரைதல், கன்று தாயை அழைத்தல் — ஓசை நயம் ஒவ்வொன்றில் ஒவ்வொருவருக்கு; அவரவர் இயல்புக்குத் தக்கபடி கிடைக்கத்தான் செய்கிறது. எனவே 'ஓசை நயம்' என்பது வெறுத்து ஒதுக்கப்படவேண்டிய ஒன்றல்ல. ஆனால் அதேபோது ..........

**அதோ பார் குகை**
**அங்கு முடிப்பேன் என் பகை**
**அறிவாயோ, என்னிடம் தோற்றவர் தொகை**
**ஆயிரம் உண்டு போர் வகை**

குகை—பகை—தொகை—வகை!!
மேலும்கூடக் கூட்டிக் கொள்ளலாம், சிகை, நகை, என்றெல்லாம்.

ஓசைநயம் தமிழில் நிரம்பக் கிடைக்கும் — ஆனால் அதை மட்டுமே நம்பி, 'நடை' காட்டினால், சிறிது நாட்களில், தமிழின் இனிமைபற்றி அனைவரும் இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்களே, அதற்கேகூட ஊனம் வந்துவிடும்.

ஓசைநயம் — அடுக்குத் தொடர் —இரட்டைக் கிளவி — போன்றவைகள், பூங்காவிலுள்ள கவின் மலர்கள் போன்றவை!

தாமாக மலரவேண்டும் — மணமுள்ளவைகளைப் பதமாகப் பறித்துப் பக்குவமாக மாலை தொடுக்க வேண்டும்— அப்போது தான் கவர்ச்சி கிடைக்கும்.

ஓசை நயத்தை எப்படியும் பெற்றுத் தீரவேண்டும் என்று முயற்சித்தாலோ, காது குடைச்சல் ஏற்படுவது மட்டுமல்ல, மொழிக்கு ஏற்பட்டுள்ள பெருமதிப்பும் குன்றும், குறையும், குலையும்.

**கழுதூர்**
**பழுதூர்**

## தொழுதூர் வழுதூர்

தம்பி, இந்தப் பெயர்ப்பட்டியலைப் பார்த்தாயா? ஓசைநயத்துக்காகவே வேண்டுமென்றே இட்டுக் கட்டியது போலல்லவா தோன்றுகிறது.

குகை
பகை
தொகை
வகை

என்று தேடிப் பிடித்திழுத்து, கூட்டிக் கலக்கித்தருவதுபோலவே வழுதூர், தொழுதூர், கழுதூர், பழுதூர், கற்பனைக் கலவை என்றுதான் எண்ணிக்கொள்வாய்; ஆனால், உண்மையிலேயே இந்தப் பெயர்கள்கொண்ட ஊர்கள் தமிழ் நாட்டில் உள்ளன. அனைத்தையும் ஒருசேரக் கூறும்போது, குகை, பகை, தொகை, வகைபோல, வேண்டுமென்றே ஓசை நயத்துக்காகவே கூறப்படுபவை போலத் தோன்றும்.

ஓசை நயத்தில், இயல்பாகவே அமைந்து, பொருள் செறிந்து, பொலிவு தருபவையே தேவை; பொருளற்று, பொலிவற்று வலிந்து கொண்டு வருவது மொழிக்கு நாமே நம்மையும் அறியாமல் செய்துவிடும் தீங்காகும்.

ஓசைநயம் உயர்தரமாகவும், இயற்கைக்கு முற்றிலும் பொருந்திய தன்மையிலும் அமைந்துள்ள காப்பியங்களும், பாக்களும், தமிழ் மொழியில் உள்ள அளவு, பிற மொழிகளிலே உண்டா என்பது சந்தேகமே.

மொழி வளமுள்ளதாகவும் நெடுங்காலமாக, புலவர் பெருமக்களால் வளர்க்கப்பட்டதாகவும் இருந்தால் மட்டுமே, சுவையும் பொருளும் ஒருசேரத்தரவல்ல ஓசைநயம்—அடுக்குத் தொடர் ஆகியவை கிடைக்கும். தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள நமக்கு அந்தச் செல்வம் நிரம்ப இருக்கிறது. கண்டறிவதும் கொள்வதும் எளிது, கொண்டதைப் பொருள் உணர்ந்து தருவது கடினம்; எனினும் இயலாததன்று. எப்படியும் 'ஓசைநயம்' தந்தாகவேண்டும் என்ற 'மன அரிப்பை'ச் சிறிதளவு அடக்கிக்கொண்டால் போதும், உயர்தரமான, 'ஓசைநயம்' கிடைக்கும்.

என்ன அண்ணா! தமிழாசிரியர் 'வேலை'யைத் துவக்கிவிட்டாயே, என்று கேட்கிறாயா, தம்பி!

அடுக்கு மொழியாலும் ஓசை நயம் காட்டியும், மக்களை மயக்கி அவர்களை ஆகாத வழியெலாம் அழைத்துச்சென்று ஆன்றோரும் சான்றோரும் அமைத்தளித்த அற நெறியை, அருள் நெறியைக்கெடுத்தொழிக்கிறோம் என்றோர் பழி படர்ந்திருக்கிறதல்லவா, நம்மீது; அதுபற்றிய 'விளக்கம்' விரும்பினார் ஒரு தம்பி! அவருக்குக் கூறுவதை உனக்கும் காட்டுவோமே என்ற எண்ணத்தில் இதை எழுதினேன்.

கலை
சிலை
வலை
நிலை
உலை
மலை
தலை
இலை

இவை, சிறுசிறு மாற்றங்கள் செய்துவிட்டால்,

காலை
மாலை

என்று புதுவடிவம் மட்டுமல்ல, பொருளே மாறிவிடுகின்றன!

மிகக் குறைந்த அளவு எழுத்தில் மாற்றங்கள் செய்து, முற்றிலும் வேறான பொருள் பெறத்தக்க வகையில், தமிழ்மொழி, அழகுற அமைந்திருப்பதைக் காணும்போது, நமக்கெலாம் பெருமையே பிறக்கிறது.

ஆனால், இவைகளை ஒரே இடத்திலே கூட்டி வைத்துக் காட்டியாக வேண்டுமென்ற 'மன அரிப்பு' ஏற்பட்டுக் கலை வலை என்பார், சிலைக்கும் உலைக்கும், மலைக்கும் தலைக்கும், இலைக்கும் ஓலைக்கும் வித்தியாசம் தெரியாத நிலையில் உள்ளவர்கள் என்று ஒரு தொடர் கட்டிக் காட்டி, இதிலே கலை, சிலை, வலை, நிலை, உலை, மலை, தலை, இலை, ஓலை, அத்தனையையும் அடைத்துக் காட்டி இருக்கிறேன், எப்படி என் திறம்? என்று கேட்பது, மொழிக்குத்தான் பெருமை தருகிறதா, அதைக் கையாள்வோருக்குத்தான் பெருமைதருமா.

நாம், ஓசைநயம் காட்டி, அடுக்கு மொழி பேசி, மயக்கிவிடுகிறோம், என்று குறை கூறுவோரில் பலர், ஓசை நயமும் அடுக்கு மொழியும் இவர்களுக்குத்தானா, எமக்கும் எளிதுதான் என்றுகூறி, வேட்டையாடி, நான் இப்போது காட்டிய 'தொடர்'போன்றவைகளைக் கட்டிக் காட்டுகிறார்கள்; விலைபோகாதது கண்டு கோபமும் கொள்கிறார்கள்.

துடுக்குத்தனமாக
அடுக்கு மொழி பேசுவோரை
மடக்குவதற்கு
வெடுக்கு மொழி பேசி
முடுக்குடன் நான் வந்தால்
தடுக்கும் பேர்வழி யார்?

நமது 'அடுக்கு மொழி'யைக் கண்டிக்க துடுக்கும் அடுக்கும், மடக்கும் வெடுக்கும், முடுக்கும் தடுக்கும் சரமாரியாகக் கிளம்புகின்றன. எல்லாம் குறி தவறிவிடுகின்றன; கூரும் மழுங்கிப்போகின்றன.

'அடுக்கு மொழி' ஆகாது என்பதாலோ, அது தவறு என்பதாலோ அல்ல பிறர் அது குறித்து, நம்மைக் கண்டித்துப் பேசுவது. அடுக்குமொழி பேசவேண்டும் என்பதுதான் அவர்கட்கும் உள்ள ஆவல்; ஆனால் அது சுவைபடவும் பொருள்தரவுமான முறையில் நம்மிடம் இருப்பதுகண்டு, இது இவர்களிடம் இருக்கிறதே என்ற எரிச்சலில் பழம் புளிக்கிறது என்கிறார்கள்!! வேறொன்றுமில்லை.

அவர்கள் சொல்லுகிறார்கள் என்பதற்காகவும், நாம் மொழியின் அழகு விளங்கிடும் வகையான அடுக்குமொழியின் ஓசை நயத்தினை விட்டுவிடவும் தேவையில்லை; ஓசை நயமும் அடுக்குமொழியும் இருந்தால் மொழி அழகுபெறும் என்பதற்காகவே, தேடித் திரிந்து கூட்டில் அடைத்துவைத்து அழகு பார்க்கவுந் தேவையில்லை.

இருளைக் கிழித்துக்கொண்டு செல்லும்போதுதான், மின்மினியே அழகளிக்கிறது; மின்மினி ஒளிதருவது கண்டு, அதனைக் கண்ணாடிப் பெட்டிக்குள் அடைத்துவைத்து, அழகு காண முயற்சித்தல் சரியல்ல.

ஓசை நயம் தமிழ்மொழிக்கு மட்டுமே நிரம்பவும் நேர்த்தியுடனும் இருக்கிறது என்பதற்காகவே, அம் மொழி வேறெல்லாமொழிகளையும்விட உயர்ந்தது என்று மார்தட்டத் தேவையுமில்லை; அது அழகுமாகாது. இருபத்து ஆறு எழுத்துக்களை மட்டுமே கொண்ட ஆங்கிலமொழி இன்று, உலக அரங்கம் எங்கணும் உயர்வு பெற்றுத்திகழ்கிறது; மறப்பதுகூடாது.

கா
மா
வா
தா
போ
பா
பூ
தை
வை
கை
தீ
ஈ
நீ
ஓ
தூ

இப்படி ஒரே எழுத்துகூடத் தமிழ் மொழியில் பொருளளிக்கும் திறம் பெற்றுத் திகழக் காண்கிறோம்; எனினும் இதனை வேண்டுமென்றே ஒரு கூட்டுக்குள் பிடித்திழுத்துப் போட்டுக் காட்ட 'நடை' தேடுவது நல்லதல்ல; அதாவது அளவும் முறையும், தேவையும் அறிந்து பயன்படுத்தினால் எழிலும் சுவையும் நிரம்பக்கிடைக்கும்; தவறினால் எரிச்சல் கிளம்பும், ஏளனம் பிறக்கும்.

முறையுடன் தந்திடின் எத்துணை எழில் கிடைக்கிறது என்பதனைத் தம்பி, இதோ இந்தப்பள்ளு எடுத்துக் காட்டுகிறது—பார்.

**வானக்குரிசில் வள்ளலாய் வரைக்**
**கோனைப் பரிசு—கொள்ளலாய்**

**வழங்குமாறும் புறப்பட்டே-புனல்**
**முழங்கு மாறும் தலைப்பட்டே**

**தானக்களிறு படிந்திடக்—கோலை**
**ஏனக் களிறு மடிந்திடத்**

**தழையின் ஆரம் உந்தியும்—பசும்**
**கரையின் ஆரம் சிந்தியும்**

**கானக்குளவி அலையவே—மது**
**பானக் குளவி கலையவே**

முக்கூடற்பள்ளு தரும் ஓசை நயம் இங்ஙனம் அமைந்திருக்கிறது. எனவே ஓசைநயம் எற்றுக்கு என்று கேட்போர் பற்றி நாம் கவலைப்படுவதற்கில்லை, ஆனால் முறையற்ற ஓசை நயம் கூடாது என்ற எண்ணம் நமக்கு எப்போதும் துணை நிற்கவேண்டும், இல்லை என்றால்,

பள்ளாம் பள்ளு
தள்ளு தூரத் தள்ளு

என்று 'விளையாடத் தோன்றும்—துவக்கத்தில் அது விலை போகவும் செய்யும், பிறகோ மொழியின் அழகுக்கு நாமே ஊறு செய்கிறோம் என்ற உணர்வு வந்து தாக்கும்.

'கூட்டுப்புருவம்' சில குமரிகளுக்கு இருந்திடக் கண்டிருப்பாய் — புருவமே இப்போது அருமையாக மட்டுமே காணக் கிடைக்கும் காட்சியாக இருக்கிறது—எனவே 'கூட்டுப்புருவம்' நிரம்பக் கிடைத்திடாது; ஆனால் அது இயற்கையாக அமைந்திருந்தாலோ, அந்த அணங்குக்கு அது தனியானதோர் அணியாகவே விளங்கிடும்—ஆனால் அதனைக் கண்டு, சரி, சரி, கூட்டுப் புருவம் அழகளிக்கிறது, எனவே இரு புருவங்களையும் மை கொண்டு இணைத்து, கூட்டுப்புருவம் ஆக்கிக் காட்டுவோம், என்று செய்தால் தூரத்துப் பார்வைக்கு அழகளிக்கக்கூடச்செய்யும், அருகே செல்லச் செல்ல,'மைவண்ணம்; காண்போம், கண்டு, இவ்வளவு தானா! என்போம்; ஏளனம் கூடச்செய்யத்தோன்றும், நமக்கு ஏற்படுவதைவிட அதிகச் சங்கடம், கூட்டுப்புருவம் தீட்டிக் கொண்ட குமரிக்கு ஏற்படும், வண்ணம் எப்போது கைபட்டுக் கலைந்து விடுகிறதோ என்ற அச்சம் குடையும்

மொழியின் ஓசை நயம் குறித்தும், இதே கதிதான்.

தம்பி! சினிமாக்களில் ஒரு முறையைக் கையாளுகிறார்கள்.

அங்கு கதைகட்கு ஏற்றவகையில் புருவங்கள் தேவைப்படுகின்றன! குனித்த புருவம், கூட்டுப் புருவம், நெரித்த புருவம், படர்ந்த புருவம், வில்லுப் புருவம் இப்படிப்பலப்பல!

நல்ல பெண்மணியின் புருவம் வில்போல் வளைந்து இருக்கும்—இருக்கவேண்டும். காதகிக்கு புருவம், அரவம்போல அச்சமூட்டுவதாக அமைதல் வேண்டும். அப்படி அங்கு ஒரு முறை!!

எந்த ஏந்திழையிடம் இத்தனை புருவங்கள் கிடைக்கமுடியும். எனவே அங்கு முதலில், ஏந்திழையின் இயற்கைப் புருவத்தை எடுத்து விடுகிறார்கள் — வழித்தெடுத்துவிடுகிறார்கள்—இயற்கை பறிக்கப்பட்டான பிறகு, எழில் காட்டும் கலைஞன், தன் இச்சைக்கு ஏற்ப, புருவங்கள் அமைக்கிறான்—காதளவு வளர்ந்த கண்ணினை என்னென்பேன். காமன் தன் கருப்பு வில்போன்ற புருவத்தைக் கண்டேன், அதன் அழகை எவ்வாறு கூறுவேன் என்றெல்லாம் பிறகு திரைக் காதலன் பாடம் படிக்கிறான். கொட்டகைக் கோமான்கள் குதூகலமடைகிறார்கள். ஆனால் உண்மையில் இயற்கையாக இருந்த 'புருவம்' பறிபோய்விட்டது, இரவல் புருவம் பிறர் காணும்போது எழில் காட்டும் வகையில், அமைக்கப் படுகிறது.

தமிழ் மொழியிலும், தம்பி, அதற்கென்று இயற்கையாக அமைந்துள்ள, எழில் முறைகளைக் களைந்தெறிந்துவிட்டு, பிறமொழிச் சொற்களையும் முறைகளையும் கலந்து புதிய எழில் காட்டுகிறோம் என்று கூறுவாருளர்.

சினிமாக்களுக்கு 'சிதைத்தலும் சேர்த்தலும்' கூட்டலும் குறைத்தலும் மறைத்தலும் மிகுத்தளித்தலும் தேவைப்படுகிறது; அந்த உலகத்து இலக்கணம் அது; குறை கூறுவதற்கில்லை; ஆனால், மொழித் துறையில் இந்த முறையைப் புகுத்தி, உள்ள எழிலை உருக்குலையச் செய்து, பாழ்படுத்துவது அடாத செயலாகும். ஆனால் 'மேதை'கள் பலர், பிற மொழிச் சேர்க்கையும், பிற முறைகளின் சேர்க்கையும். தமிழ்மொழியை வளமாக்கும் என்று காரணம் காட்டி இந்தத்தீய செயலைச் செய்து வருகின்றனர்.

இதனை அறிந்து, தடுத்திட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு பணியாற்றும் நம்மாலேயேகூட, (சற்று அதிகமாகவே என்னால்!) பிறமொழிச் சேர்க்கையையும் பிற முறைகளின் சேர்க்கையையும் நீக்கிப் பேசவும் எழுதவும் முடியாமலாகி விட்டிருக்கிறது—ஏனெனில், நாம், தூய தனித் தமிழ் சித்திரவதைசெய்யப்பட்டுபிறமொழியும் பிற முறையும் கலந்து பேச்சும் எழுத்தும் 'மணிப்பிரவாளம்' என்ற வடிவுகொண்டு, தமிழும் வடமொழியும் குழைத்து வழங்கப்பட்ட நாட்களில் பயின்றவர்கள் — எனினும், புலவர் பெருமக்களின் அறிவுரை கேட்டதால், இந்தக் 'கலவை' தீது பயப்பது என்று தெரிந்து, தமிழ் மொழிக்கு மீண்டும் தனியானதோர் ஏற்றம் தேவை என்ற தூய நோக்குடன் பணியாற்றிவருகிறோம், எனவே, நம்மாலே முற்றிலும் 'தனித்தமிழ்' எழிலைக் காட்ட இயலவில்லை.

(13-ம் பக்கம் பார்க்க)

# அடிப்படை உண்மைகள்

—[ ப. வாணன் ]—

"வற்றாத ஜீவ நதிகள்! வளமான பூமி! பூமிக்கடியிலே தங்கம்! இருந்தும் நாம் ஏழைகள். நமது இல்லங்களிலே வறுமை. ஏனிந்த பரிதாப நிலை! ஏனிந்த ஏழ்மை!" என்று ஆயிரமாயிரம் கூட்டங்களில் நமது தோழர்கள் தினம் கேட்டு வருகின்றனர். இந்த பிரச்னைக்கு வழிதேடி தங்கள் நேரம், உழைப்பு சிந்தனை எல்லாவற்றையும் செலவிடுகின்றனர், நாட்டுப் பற்றுக் கொண்டவர்கள். எல்லாம் இருந்தும், ஏனிந்த நிலை! பாய்ந்தோடி வரும் காட்டாறுகளை அடக்க வழி இருக்கிறது. பாலைவனத்தையும் சோலைவனமாக்கமுடியும். பூமிக்கடியில் தூங்கும் கனிப் பொருள்களை நாட்டிலே வாழ்வு தரும் சுரங்கமாக மாற்றலாம். எல்லாவற்றையும் 'விஞ்ஞானம்' செய்யும். நாட்டிலே 'விஞ்ஞானம்' வேரூன்றினால், வாழ்வு தானாக வரும். மாடுபோல் உழைத்து மனிதன் காணும் பலனைப்போல் ஆயிரமடங்கு லாபத்தை, ஒரு இயந்திரத்தை இயங்கச் செய்து பெறமுடியும். இதை உணர்ந்துதான் மேல் நாடுகளில் ஆயிரக் கணக்கில் விஞ்ஞான ஆய்வுச் சாலைகள் நிறுவுகின்றனர். விஞ்ஞான முறைகள் இல்லாமல் எந்த நாட்டிலும் உற்பத்தி வளர்ந்ததில்லை. வளரவும் முடியாது.

வாழ்க்கை வசதிகளையும் தேவைகளையும் அடைய ஒருவன் உழைத்தாக வேண்டும். நாம் முழு வசதிகளையும், தேவைகளையும் அடைவதற்கு மனித உழைப்பும், மனிதனால் கட்டுப்படுத்தப்பட்டு வரும் மிருகங்களின் உழைப்பும் மாத்திரம் போதாது. மனித சக்தியையும், மிருக சக்தியையும்விட பல்லாயிரம் மடங்கு மேலான இயந்திர சக்தி வேண்டும். மேல் நாடுகள் அப்படிப்பட்ட இயந்திர சக்தியை பயன் படுத்திக் கொள்ளுகின்றன. நாமோ அந்த அளவுக்கு இயந்திர சக்தியை பயன்படுத்துவதில்லை. அதனால்தான் நம்மால் அயல் நாடுகள் அனுபவிக்கும் அளவுக்கு வாழ்க்கை வசதிகளையும், தேவைகளையும் அனுபவிக்க முடியவில்லை.

நமது நாடு அமெரிக்கா முதலிய மேல் நாடுகளைப்போல் ஆகவேண்டும் என்றால் குறைந்த செலவில் அதிக உழைப்பை பெற முயற்சிக்க வேண்டும். நாட்டின் தொழில் வளம் பெருகி குறைந்த மனித உழைப்பில் பெருத்த உற்பத்தியை செய்ய வேண்டும். மேல் நாட்டு பொருளாதாரத்தை மேலெழுந்தவாரியாக படிப்பவர்களுக்குக்கூட இந்த உண்மை சுலபமாக விளங்கும். நாடு தொழில் மயமாகி உற்பத்தியை பெருக்கினாலும் உற்பத்தி செய்த பொருளுக்கு மார்க்கெட் பிடிப்பதும் ஒரு பெரும் பிரச்னை தான்.

விஞ்ஞான ஆராய்ச்சிகளைக் கொண்டு நாம் நிச்சயமாக நம் தேவைகளை அதிகமாகத் தயாரிக்க முடியும். அது உண்மை. ஆனால் அப்படி தயாரிக்கப்படும் பொருள்களை ஆவலுடன் வாங்குவதற்கு மக்கள் இருக்கவேண்டுமே! அப்பொழுதுதானே எந்த தொழிலும் வளமுடன் முன்னேறும்! லாபமின்றி தொழில் செய்ய யாவரும் முன்வரமாட்டார்கள். தொழில்கள் தேசிய மயமாக்கப்பட்டாலும் இந்த பிரச்சினை உருவெடுக்கும். ஆலைகள் உண்டாக்கும் பொருள்களை மக்கள் வாங்கி அனுபவிக்கமுடியாத அளவுக்கு ஏழ்மையில் இருக்கிறார்கள். மக்கள் ஏழ்மையில் இருப்பதற்குக் காரணம் நாட்டில் அவர்களுக்கு வேலைகொடுக்கும் அளவுக்கு ஆலைகள் இல்லாதது! இப்படி ஒன்றை ஒன்று தழுவி நிற்கிறது இந்த பிரச்னை! இத்துடன் இன்னொரு பிரச்னையும் கவனிக்கப்படவேண்டியதுதான். ஆலைகள் ஏற்பட்டு இயந்திரங்கள் மூலம் தேவைகளை அதிகமாக உற்பத்தி செய்ய ஆரம்பித்தாலோ நாட்டில் ஆங்காங்கே நடந்துவரும் குடிசைத் தொழில்கள் நசித்து ஏற்கனவே உள்ள வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கிறது. இப்படிப்பட்ட நேர் எதிரான சூழ்நிலைகள் ஏற்படக்காரணம் நாட்டை தொழில் முறையாக்கும் போக்கு ஒரு தவறான அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஒருஒழுங்குமுறையைகடைப்பிடிக்க வேண்டும்.

அதிலும் நம் நாட்டை தொழில் முறை ஆக்க வேண்டுமென்றால் நாம் இப்பொழுது உள்ளதுபோல் அல்லாமல் ஒரு ஒழுங்கு முறையை கடைப்பிடித்தால்தான் முடியும். முதலாவது பெரும் ஆலைகளுக்கு தேவையான இயந்திரங்கள், அதிக சக்தியை உற்பத்திசெய்யும் மின்சாரக் கருவிகள். இரும்பு ஆலைகள் முதலான மூலதனப் பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும்.

இரண்டாவது முக்கிய இரசாயனப் பொருள்கள், வாழ்க்கைக்கு அத்தியாவசியமான இரும்பு சாமான்கள், தாவரங்கள் நன்றாக வளருவதற்கான செயற்கை எருப் பொருள்கள் முதலான உற்பத்தி பொருள்கள் உண்டாக்கப்பட வேண்டும். கடைசியாக மின்சார கருவிகள், மற்றும் இதர மின்சார சாமான்கள், காகிதம், நமக்கு தேவையான ஆடை வகைகள் முதலான எல்லா மக்களும் விரும்பி வாங்கக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும். கடைசியில் குறிப்பிட்டதை முதலில் உற்பத்தி செய்தால் அது தேவைக்கு அதிக உற்பத்தியாகும். ஏனென்றால் அதை வாங்கும் மக்கள் ஏழ்மையில் வதிபவர்கள். ஆலைகள் ஏற்பட்டு அவர்களுக்கு வேலை கிடைக்காத நேரத்திலே ஆடை ஆபரணங்களையும் இன்னும் வாழ்க்கைத் தேவைக்கான சாமான்களையும் எப்படி வாங்குவர் அந்தமக்கள்.

நம் நாட்டில் நூற்றுக்கு எண்பதுபேர் விவசாயிகள். இன்னும் அவர்கள் யாவரும் விவசாயத்திற்கு மனித உழைப்பையும் விலங்கு உழைப்பையும் நம்பித்தானிருக்கிறார்கள். விவசாயத்தை நாம் இயந்திரங்கள் கொண்டுசெய்ய ஆரம்பித்தால் உற்பத்தியை பெருக்கிவிடலாம். ஆனால் அதனால் வரும் தீங்குகள் (1) அநேகர் வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்குவர். (2) உற்பத்தியான பொருளின் விலையும் குறையும். விலை குறைவால் விவசாயிகளாக இல்லாத 100-க்கு 20-பேர்தான் பலனடைவர். மற்ற 100-க்கு 80-பேரான ஏழை விவசாயிகள் வேலையில்லாமல் திண்டாடுவர். அவர்கள் உற்பத்தியான பொருளை எப்படிவாங்க இயலும்?

ஆகவே மூலதனப் பொருளையும், உற்பத்தி பொருளையும் உண்டாக்கக் கூடிய ஆலைகளை ஒருபுறம் நிறு

விளுல் வேலேயில்லாமல் தவிக்கும் பெரும்பாலான மக்களுக்கு வேலே அளிக்க முடியும். அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதால் மக்கள் வாங்குவதற்கு என்றே உற்பத்தி செய்யும்பொருளுக்கு நாட்டில் நல்ல தேவை இருக்கும். இந்த முறையே, நாட்டில் தொழில் முறையாக்குவதில் ஏற்படும் தீங்குகளான வேலேயில்லாத்திண்டாட்டம் அதிக உற்பத்தி முதலானவைகளே சமாளித்து நாட்டை முன்னேற்றும். ஒரு நாட்டின் பொருளாதாரம், விவசாயத்தையே நம்பி வாழ்வதை இந்த முறை மாற்றி அந்த நாட்டை தொழில் மயமாக்கி அதையே நம்பும் படி செய்யும்.

இதனுல் விவசாயத்தை புறக்கணிக்கவேண்டும்என்பதில்லே.விவசாயம் நவீன விஞ்ஞான முறைகளேக் கொண்டு மாற்றப்பட வேண்டும். பழங்கால விவசாய முறையிலும், தொழிலிலும் வருங்கால நல்வாழ்வை நாம் எதிர்பார்ப்பது விஞ்ஞான உலகுக்கு உகந்தது இல்லே.

ஒரு விவசாய நாட்டை தொழிற்சாலே மிகுந்த நாடாக ஆக்குவது என்பது லேசான காரியமல்ல. அதிகமான மூலதனம், ஆலேகள், பவர் பிளாண்டுகள் அவைகளே நிறுவ கட்டடங்கள் தேவைப்படும் இதற்கான மூலதனம் நாட்டு மக்களின் சேமிப்பில்தானிருந்து வர வேண்டுமென்று எண்ணுவது தவறு. நம் நாட்டில் வாழ்க்கைக்கே போராடிக் கொண்டிருக்கும் மக்களிடம் சேமிப்பை நாம் எங்ஙனம் எதிர்பார்க்கமுடியும்.

மக்கள் தொகை உற்பத்தியிலோ நம்நாட்டைப்பற்றி, கூறவேண்டாம்! அந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது. உலகத்திலேயே நம் நாடு சைனுவுக்கு அடுத்தாற்போல் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. கூறப்போனுல் மூலதன உற்பத்தியும், மக்கள் உற்பத்தியும் ஒன்றுக்கொன்று போட்டி போடுகிறது. நம் நாட்டில் முதலாவது வெற்றி அடைந்தால் நாம் பணம் படைத்த நாடாக ஆகிக்கொண்டே போகலாம். இரண்டாவது வெற்றியடைந்தாலோ இப்பொழுது உள்ள நிலேயைவிட வறுமை நம்மை வாட்டி வதைக்கும்! இரண்டும் வெற்றி அடையவில்லே என்ருல் இருக்கவே இருக்கிறது நாம் உள்ள நிலேமை—ஏழ்மை. மூலதனம் வளர்ந்தாக வேண்டும். பின்பு தான் விவசாயம், ஆலேகள், சமூக நலன்கள் ஒவ்வொன்ருக வளரும். இவைகள் ஒன்றுக்கொன்று கோர்வையாக வளர்ந்துகொண்டு சென்ருல்தான் நாட்டின் முன்னேற்றம் காணலாம்.

பொருளாதாரம் கற்பிக்கும் இந்த அடிப்படை உண்மைகளே எந்தளவு நமது தேசியத்தோழர்கள் புரிந்துகொண்டார்கள் என்று புரியவில்லே. முதலாவது ஐந்து ஆண்டு திட்டம் முடிந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் அமுலுக்கு வரப்போகிறது. இந்நிலேயில் நிறுவப்பட்ட 13-ஆய்வுச்சாலேகளில் மூன்றுதான் திராவிடத்தில். அந்த மூன்றும் இன்னும் ஆரம்பகட்டத்திலேயே இருப்பது மாத்திரமில்லே —வடநாட்டு ஆய்வுச்சாலேகளோடு ஒப்பிடும்போது மிகச் சாதாரணம். இருந்தும் நாட்டில் எங்கும் பசி, பட்டினி, அரைவயிறு நிரம்பாத மக்கள் அதிகம் பேரை நாம் பார்க்கிறேம். நம் நாட்டில் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு மிகச் சிறிய பணம் தான் செலவிடப்படுகிறது. மேல் நாட்டில் ஆராய்ச்சிசெய்து இயந்திரங்கள் கண்டுபிடித்து, அவைகளேக்கொண்டு உற்பத்தியைப் பெருக்குகிருர்கள் நாம் அந்த இயந்திரங்களே மாத்திரம் வாங்கி உற்பத்தியை பெருக்க முடியாது. மேல்நாட்டு முறைகளும், கருவிகளும் நம் நாட்டிற்கு அப்படியே உகந்ததாக இருக்கமுடியாது. ஒரு நாட்டு கனிப்பொருள்களின் நிலேமை அவற்றை உபயோகப்படுத்தும் முறை முதலியவை நாட்டிற்கு நாடு வித்தியாசப்படத்தான் செய்யும். இவைகளே ஆராய்ச்சிசெய்து நமது நாட்டின் தட்பவெட்ப நிலேகளுக்கு ஏற்ற இயந்திர சாதனங்களே உண்டாக்க ஏராளமான ஆய்வுச்சாலேகள் நம் நாட்டிற்கு அவசியம் தேவை. அப்பொழுதுதான் நாட்டில் வளமான தொழிற்சாலேகள் நிறுவமுடியும். இதன் மூலம் நாட்டுவளம் அதிகமாகி நாட்டின் பொருளாதாரம் உயரும். அது வளர வளர விஞ்ஞான ஆராய்ச்சி வல்லுனர்கள் புதுமாதிரி முறைகள் கண்டுபிடிப்பார்கள். மேலும் மேலும் நாட்டின் தொழில் முறை வலிவடைந்து பொருளாதாரம் அதிகமாக வளர்ந்துகொண்டேசெலலும். இப்படித்தான் மேல்நாடுகள் எல்லாம் முன்னேற்றமடைந்தன.

நிலக்கரியிலிருந்து அதிகமான சக்தி உண்டாக்கப்படுகிறது நமக்கு தெரிந்த விஷயம். நம் நாட்டிற்கு தேவையான நிலக்கரி நம் நாட்டில் கிடைப்பதில்லே தொழில் முறையாக்கப்பட்ட இங்கிலாந்து — அமெரிக்கா ஏன்! தொழில் முறையாகிக்கொண்டிருக்கும் சைனு இங்கெல்லாம் கிடைக்கும் நிலக்கரியின் அளவைவிட நம் நாட்டில் கிடைக்கும் அளவு மிகக் குறைவு. இதை சமாளிக்க விஞ்ஞானிகளிடம் வேறு ஒரு முறை உள்ளது. மின்சார உற்பத்தியை அதிகமாக்க வேண்டும். அதைத் தான் மேல் நாடுகள் கையாளுகின்றன. அணுசக்தியை, அழிக்கும் வேலேக்கு உபயோகப்படுத்தாமல், ஆக்க வேலேக்கு உபயோகப் படுத்தலாம். இதுவே தற்காலத்து உலக விஞ்ஞான விற்பன்னர்களின் புதிய கண்டுபிடிப்பு, அணுசக்தியிலிருந்து, பெரிய இயந்திரங்களே ஓட்டுவதற்கு தேவையான மின்சாரம் உண்டாக்கலாம். ஆனுல் இந்த முறையில் செலவு சிறிது அதிகமாகும். இதை காலப் போக்கில் சமாளித்துவிடலாம்.

காரைக்குடியில் மூன்ருண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட மின்சார—ரசாயன ஆராய்ச்சி நிலேயம் இன்னும் வேலேசெய்ய ஆரம்பிக்கவில்லே. சென்னேயில் ஆரம்பிக்கப்பட்ட கணித ஆராய்ச்சி நிலேயம் பலன்தர நிச்சயம் நீண்ட நாட்களாகும். மைசூரில் இருக்கும் உணவு ஆராய்ச்சி நிலேயம் தொழில்பிவிருத்திக்கு அப்பாற்பட்டது.

உண்மையில் தொழிலபிவிருத்திக்கு உதவி செய்யக்கூடிய விஞ்ஞான ஆராய்ச்சி சாலேகள் டில்லி வட்டாரத்திலேதான் நிறுவப்பட்டிருக்கிறது. பெரும் பெரும் அளவிலே திராவிடம் ஏமாற்றப்படுவதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகத் தேவையான ஆய்வுச்சாலேகள் விந்தியத்திற்கு அப்பால்தான். பொது மக்கள் கண்முன்வராத பெரும் சுரண்டல் இது. நாட்டு முன்னேற்றத்திலே அக்கறை கொண்டவர்கள் எவரும் இதை சிந்திக்கவே செய்வர். சிந்தித்தால் திராவிட விடுதலேயை தவிரவேறு வழியில்லே என்பதையும் உணருவர்.

★




அழுகிய முட்டைகளால் அடித்தனர்.

ஆகா! ஊகூ—என்று கேலிக் குரல் எழுப்பினர்.

கற்களாலும் தாக்கினர்.

கையில் கிடைத்த எதையும் விட வில்லை.

✱

ஒரு பெண்ணின் பின்னாலே சென்றார்கள் என்பதற்கு இவ்வளவு அமர்க்களமும் நடைபெற்றிருக்கிறது! சென்றவர்கள், பேராசிரியர்கள்—அவர்களைத் தாக்கி அடித்தவர்கள், ஊர்மக்களும், மாணவர்களும்.

கெடுமதி கொண்டோ, மான்விழியாளே உனை நான் மறப்பேனா என்கிற நினைவாலோ அல்ல அப்பெண்ணின் பின்னால் பேராசிரியர்கள் சென்றது! அவளைக் காப்பாற்ற!

தினசரி காலையில் அவள் கல்லூரிக்கு வரும் போதும், போகும் போதும், பாதையின் இருமருங்கிலும் நிற்கிறார்கள் ஏராளமான மக்கள். அவர்களோடு, மாணவர்களும் போய்ச் சேர்ந்து கொள்ளுகிறார்கள். கல்! முட்டை! கலாட்டா!—எல்லாம், நடைபெறுகிறது. கேலி செய்யப்படுகிறாள், அப்பெண்! கலாட்டாவுக்கு ஆளாகிறாள், அக்கன்னி!! இந்த அநாகரீக ஆபத்திலிருந்து அவளைக் காப்பதற்காகப் பேராசிரியர்கள், துணைசெல்லுகின்றனர், ஒவ்வொரு நாளும்.

"இவர்களுக் கேனய்யா, இந்த வேலை?"

"அவளைப்பார்! அவள் உருவைப் பார்!!"

இப்படி, ஏதேதோ, சொல்லி ஏசுகிறார்கள்! குழப்பம் வலுத்து அவளுக்கு பாதுகாப்பு அளிக்க பேராசிரியர்களால் முடியாது போகவே, போலீசார் தருவிக்கப்பட்டனர்.

காலையிலும், மாலையிலும் போலீசார் புடைசூழ, அக்கன்னி கல்லூரிக்கு வருவாள்; செல்வாள். அப்போதும், ஆர்ப்பாட்டக்காரர்களின் சேட்டைகள் அடங்கியபாடாக இல்லை; பல்கலைக்கழகத்துக்கு வெளியே மட்டும் இருந்தால், போலீஸ் பாதுகாப்பு போதும். வகுப்பில் படிக்கும் மூவாயிரம் மாணவர்களுமன்றோ, ஒன்று இரண்டு கேலியும் கிண்டலும் செய்கின்றனர்!

கல்லூரியினர் பார்த்தனர், எதுவும் செய்ய இயலாததால் அப்பெண்ணைப் பார்த்து, "அம்மா! நீ காலையில் மட்டும் வந்தால் போதும்" என்றனர், தொல்லை குறையாதா, என்று கருதி! குறையவில்லை, வளர ஆரம்பித்தது!!

"போதுமம்மா, உன்னால் வரும் தொல்லைகள்! உன்னை, கல்லூரியிலிருந்து நீக்கிவிட்டோம்" என்று சொல்லலாம் என்றாலோ, அவள் அங்கு சேர்வதற்கே, நீதிமன்றத்திடம் வழக்காடி வெற்றிபெற்று வந்திருக்கிறாள்.

"ஆதரின் லூசியை, அவசியம் சேர்த்துக்கொள்ளவேண்டும். எந்தக் காரணம் காட்டியும், அவளுக்கு இடமில்லையென்று சொல்லக்கூடாது" என்பது நீதி மன்றத்தின் உத்திரவு. அதனால் தான், இவ்வளவு சலுகைகளும், பாதுகாப்புகளும் அவளுக்கு அளிக்கப்பட்டன. எனினும், எதிர்ப்பும் அமளியும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது, அவளொருத்திக்காக! என்னசெய்வது? யோசித்தனர், பல்கலைக்கழக நிர்வாகிகள் அனைவரும் ஒன்றுகூடி.

முடிவாக, அவள் கல்லூரிக்கு வரக்கூடாது என்று தடையொன்று பிறப்பித்துவிட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேல் மன்றத்துக்கு 'அப்பீல்' செய்வதென்று தீர்மானித்தனர்.

அழகிபோலும் அவள், இப்படிப்பட்ட அழகிகளைக் கண்டால்தான் இந்தக்காலத்து இளம் பிள்ளைகள் முன்னாலே போவதும், பின்னால் நின்று இளிப்பதும் சகஜமாக உள்ளதே; இதுபற்றி 'தேசிய ஏடுகள்' கூட தினசரி கடிதங்களைப் பிரசுரித்து வருகிறதே, அப்படியொரு சம்பவம் போலும், என்றெண்ணக் கூடும் தோழர்கள்.

சம்பவம், இங்கல்ல; அகில உலகையும் ஆட்டிடத் துடிக்கும் அமெரிக்காவிலுள்ள ஒரு மாகாணமான அலபாமாவில். ஆளான வனிதையும், அழகி என்பதால் அல்ல; நீக்ரோ என்பதால்!

✱

அலபாமா பல்கலைக் கழகத்தில் கடந்த 125 ஆண்டுகளில், இதுவரை, நீக்ரோ இனத்தவர் எவரையும் அனுமதிப்பதில்லை. அந்த அக்கிரமத்தைக் கண்டித்து, நீதி பெற முனைந்தாள், 26 வயதுள்ள ஆதரின் லூசி. அவளை, அனுமதிக்க மறுக்கவே, நீதிமன்றம் சென்றாள்—நியாயம் கோரி. மன்றத்தினர், மனித உரிமைகளை மதித்து, அவளைக் கட்டாயம் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று தீர்க்கிது பிறப்பித்தனர்! பல்கலைக் கழகத்தாரும் இணங்கவேண்டியதாயிற்று—அவளைப் பாதுகாப்புடன், பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும் ஊராரும், வெள்ளைநிற மாணவருமோ, எதிர்த்துக் கிளர்ச்சிகள் புரியவே, இப்போது அவள் மீண்டும் நீதிமன்றத்தில் கொண்டு போய் நிறுத்தப்பட்டிருக்கிறாள்.

நொடிப்போதில் உலகையே சாம்பலாக்கக் கூடிய அணுகுண்டினைக் கண்டுபிடிக்கும் அமெரிக்க பூமியிலே, அவள் ஒரு நீக்ரோப்பெண் என்பதற்காக, இப்படி அநீதி இழைக்கப்படுகிறது.

அதிலும் விந்தையென்னவெனின், அமெரிக்க பூமி இன்று அங்கு வாழும் வெள்ளை நிறத்தவரின் சொந்த இடமல்ல! கொலம்பஸ்

என்பான் 1492-ல் கண்டுபிடித்திராவிட்டால், அங்கு ஐரோப்பியர் குடியேறவே, சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது. இடமில்லாததால் ஓடியவர்களும் சுகமோடு வாழலாம் என்று கப்பலேறியவர்களும், அமெரிக்காவில்இறங்கினர் இன்று அகில உலகமே கண்டு மிரள்கிற அளவுக்குச் செல்வாக்கோடு விளங்குகிற அவர்கள்தான், இன்று அங்கு பரம்பரை பரம்பரையாக வாழும்' ஆதிக் குடிகளுக்கும், நீக்ரோக்களைப் போன்ற கருப்பு நிறத்தவருக்கும் அநீதிகளை இழைக்கின்றனர்.

இன்றுமட்டுமல்ல, அன்று தொட்டு, இந்த அக்கிரமம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இதனை அழித்தொழிக்க வேண்டும், சமநீதி பரப்பவேண்டும் என்று பாடுபட்டான் ஆபிரகம் லிங்கன். அவனைச் சுட்டுக்கொன்றது, வெள்ளையர்தம் வெறி, அறிஞர்களும், பெருமக்களும், இப்படிக் கருப்பு நிறத்தவருக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டிக்கத் தவறுவதில்லை. ஆட்சியிலமர்ந்திருப்போரும், இது அநீதி, இது ஜனநாயகமல்ல என்று கூறுமவில்லை. எனினும், 'அலபாமா' நடைபெறுகிறது, அங்கே.

காரணம், வெள்ளையரிடையே வேண்டுமென்றே வெறுப்பு மனோபாவம், நிலவிவருகிறது. அதனைப் போக்கும், மார்க்கம் தென்படவில்லை — அங்கு. மனிதாபிமானத்தை உண்டுபண்ணும், இயக்கம் இல்லை, பாடுபட. சாலையில் போனால் தீட்டு, கல்விக்கூடத்துக்கு வந்தால், அடாது. கருப்பு நிறத்தவர் என்றால் அவர்களுக்கொரு தனியிடம்—இப்படி, அநீதியும் ஆர்ப்பரிப்பும் தாண்டவமாடுகிறது.

*

ஒண்ட இடம்தேடி வெள்ளையர் அடைக்கலம் புகுந்த இன்னொரு கண்டமான ஆபிரிகாவில், நடைபெறும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு அளவே கிடையாது. நீக்ரோ இனத்தவரின் சொந்தப் பூமி, ஆபிரிகா! ஆயினும், அங்கு இடம்பிடித்துக்கொண்ட வெள்ளைப் பரம்பரை — உலகுக்கே புனிதத்தைப் போதிக்கும் பிரிட்டனைத் தாயாதிகளாகக் கொண்ட கூட்டம் — அனுதினமும், அடித்து நொறுக்கிவருகிறது, ஆபிரிகாவில்.

அலபாமாவில், ஒரு பெண்ணை கல்லூரிக் கூடத்துக்கு அனுமதிக்க மறுக்கிறார்கள்.

ஆபிரிகாவில், இதே சமயத்தில், அநீதி நிரம்பிய சட்டம் ஒன்றைக் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். கருப்பு நிறத்தவர், தங்களோடு சோலையிலும் ரயில் சாலையிலும், விருந்துக்கூடத்திலும் வேறுபல இடங்களிலும் கலக்கக் கூடாது என்று மட்டுமே கூறி வந்தவர்கள், இப்போது, தங்களுடைய பெயர் இருக்கும் ஓட்டர்கள் பட்டியலிலும் கூட அவர்கள் பெயர் சேர்ந்திருக்கக் கூடாது என்று சட்டம் செய்துகொண்டிருக்கிறார்கள்! அப்படிச் சேர்ந்திருப்பதும், அவர்களுக்கும் தங்களைப் போல ஓட்டுரிமை இருப்பதும் தகாது என்று சட்டம்கொண்டு வந்துள்ளார்கள்.

இப்படி நிறவெறி காட்டும் இவர்களனைவரும், யார், என்றுபார்க்கும் போதுதான் வேதனை வெள்ளமாகிறது! உத்தமர் இயேசுவின், உயரிய கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாகக்கூறும் கிருஸ்துவமதத்திலிருப்பவர்கள்தான், இந்த வெள்ளையர்கள். ஆயினும், இப்படிப் பேதா பேதம் காட்டுகின்றனர். ஜோகன்னஸ் பர்க்கிலிருக்கும் கிருஸ்துவப் பாதிரியாரே, அவர்களைப் பார்த்துக் கேட்கிறார், "அன்பைப் போதிப்பது, கிருஸ்துவமதமன்றோ? இனம், சாதி, வேறுபாடுகள் எதுவும் இல்லாதவர்கள் என்று உலகம் போற்றுவது கிருஸ்துவர்களை அல்லவோ! அந்த மதத்திலிருப்பவர்களா, இப்படி நிற பேதம் காட்டுவது? ஐயோ, இது அடுக்குமா, நமது வேதத்துக்கு!!" என்று, கண்ணீர்கசியக் கேட்கிறார். அவரைப்போலப்பலர்—இயேசுநாதரின் தொண்டர்களாகப் பணிபுரியும் பற்பல பாதிரிகள், அனுதினமும் கேட்கிறார்கள். ஆயினுமென்ன! அக்கிரமக்காரர்கள், அடாபிடி செய்தவண்ணமே உள்ளார்கள்!!

அநீதியை எதிர்த்து, லூசி, நீதிமன்றம் சென்று வெற்றி கண்டது போல், ஆப்பிரிகமண்ணிலும் சர்க்காரின் அக்கிரமப்போக்கை எதிர்த்து நீதிமன்றம் சென்றனர்.

"ஓட்டர்களை, நிறபேதம் கொண்டு பிரிக்கசட்டம் இயற்றுவது சரியா?"

"கூடாது! கூடாது!!"

கேள்விக்கு, தக்கபதிலளித்தது நீதிமன்றம். ஆனால், அக்கிரமக்காரர்கள் அதோடு, அடங்குவார்களா? ஆட்சியின் சூத்திரக் கயிறு வேறு கையிலிருக்கிறதே! அதனால், இப்படித்தீர்ப்பு வழங்கிய நீதிமன்றங்களையே தமக்குச்சாதகமாக மாற்றியமைத்துக் கொள்ளச் சட்டம், தீட்டிக் கொண்டுள்ளனர். தலைக்கேற்றபடி குல்லாயல்ல! குல்லாய்க்கேற்றபடி தலை அமைக்கப்படுகிறது!!

அவ்வளவு தூரத்துக்கு நிறவெறி, அவர்தம் மனதில் ஊன்றிக் கிடக்கிறது. நீதியையும் துச்சமென மதிக்கிறார்கள்—மனித உணர்ச்சியுமற்று, ஏறுமாறான காரியங்களைச் செய்கிறார்கள்.

நிறபேதம் குறித்து வரும் விந்தைச் செய்திகள், விநோத விநோதமானவை! சிந்திக்கச் சிந்திக்கக் கண்களில், கண்ணீர் வடியும்!

உயர் சாதி, கீழ்சாதி எனும் போக்கு, ஒவ்வொரு இடத்திலும், இருந்திருக்கிறது. அந்தக் காட்டுமிராண்டித்தனம், நாகரீக யுகத்தில் கருவறுக்கப்பட வேண்டுமென்றே, கருதுவர், அனைவரும். ஆனால், நாகரீக வளர்ச்சியும், விஞ்ஞான எழுச்சியும் பெற்றிருக்கும் அந்த நாடுகளிலேகூட, மக்கள் மன்றத்தில், மலரவில்லை மனிதாபிமானம். ஆபிரிகாவிலோ, அரசே, கொடுங்கோல் படைத்ததாக விளங்குகிறது!

அலபாமாவில், கல்விகற்கத் துடிக்கும் இளம் அரும்பு அக்கிரமங்களுக்கு ஆளாகி நிற்கிறாள்.

ஆபிரிக்காவில், ஜனநாயகம் போதிக்கும் வெள்ளையரின் ஆட்சியே, அதன் மணத்தை கருப்பு நிறத்தவருக்கு அளிக்க மறுக்கிறது.

இதற்கெல்லாம் பரிகாரம் தேடுவதற்கென்று இருப்பதாகச் சொல்லப்படும் ஐ. நா. ஸ்தாபனமோ, வேறு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறது. விவேகிகள் —அறிஞர்கள்—சமாதானப் பிரியர்கள், என்கிற பெயரால் ஒவ்வொரு வல்லரசிலும், ஆயிரக்கணக்கான அரசியல் வாதிகள் நடமாடிக் கொண்டுள்ளனர்.

அநீதி இழைக்கப்பட்டவர்களோ துடி துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

8-ம் பக்கத் தொடர்ச்சி

நானே, பலதடவைகளில், பேசியான பிறகும், எழுதியான பிறகும், இன்னின்ன சொற்களுக்கு இன்னின்ன தமிழ்ச் சொற்களைக் கையாண்டிருக்கலாமே—தவறிவிட்டோமே என்று எண்ணி வருத்தமுறுவதுண்டு. எனினும், தம்பி, எங்கள் மூலம் நீ இவ்வளவுதான் பெறலாம் — அதிகம் எதிர்பார்க்காதே—ஆனால் உன்னாலே முடியும் இந்தக் குறைகளையும் களைய—நாடு உன்னிடம் நிச்சயமாக அதிகம் எதிர்பார்க்கிறது.

ஆரிய மதக் கற்பனைகளுக்கு நிரம்ப இடமளித்துவிட்டதால், தமிழ் மொழிக்குரிய இயல்பு எத்துணை கெட்டொழிந்தது என்பதனை அறிய, வேறெந்தத் துறையினையும் விட, 'உவமை' கூறுகிறோமே, அந்தத் துறையினைப் பார்த்தால், மிகமிக விளக்கமாகத் தெரிந்துவிடும்.

சனியனே! உயிரை வாங்காதே.

எமன், போலவந்து தொலைத்தான்.

பெரிய, அரிச்சந்திரன்தான், வாயை மூடடா!

தூர்வாசர் போலச் சீறுகிறான்.

போதும் போய்ப் படுத்துத் தூங்கடா, அனுமாரே!

துரோபதை போலக் கதறுகிறாள்.

கலியுக பீமசேனன் என்று அவனுக்குப் பெயர்.

ஆசாமி, அர்ஜுனன்தான்!

அவள், ரம்பையேதான்.

அமிர்தம்போல இனிப்பானபானம்.

குபேரபட்டினம் போலக் காட்சி அளித்தது.

நிரம்பப் பேசுகிறோம், இதுபோல மேடைகளிலும், வீடுகளிலும், பழமை விரும்பிகள் மட்டுமல்ல, நாம் கூட.

கொல்லிமலைப் பாவை! என்று கூற நமக்கும் தோன்றுவதில்லை; கூறிடின், புரிந்துகொள்வோரும் புலவர் அவையிலே மட்டுமே கிடைப்பர்; மக்கள் மன்றம் மறந்தேவிட்டது.

கொல்லிமலையில் ஓர் சித்திரப் பாவை செதுக்கப்பட்டிருந்ததாம்.

அத்துணை எழிலாம், அப்பாவைக்கு.

தொலைவிலிருந்து காண்போர், அழகால் ஈர்க்கப்பட்டு, அருகே செல்வராம், காண்பராம், உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டு நிற்பராம், நிற்பராம், அந்த அழகு அவர்தம் உயிர்குடித்திடும்வரையில் நிற்பராம்.

மயக்கி மாய்த்திடும் பொலிவு, கொல்லிமலைப் பாவைக்கு! ஆனால், நாம் இதனை 'உவமைக்கு'க் கையாண்டதுண்டோ? இல்லை; ஏன்? நமது எண்ணத்திலேயே, பிறமொழிக் கருத்து கலக்கப்பட்டுவிட்டதால், அழகுபற்றியோ, அதனால் வந்துறும் அவதிபற்றியோ எடுத்துரைக்க நினைக்கும்போதெல்லாம், மேனகை, ரம்பை, ஊர்வசி, திலோத்தமை, இவர்களே, நமது நாவில் நின்றுவிடுகிறார்கள். தமிழ் மொழியில் காணக் கிடக்கும் கொல்லிமலைப் பாவையை மறந்தேவிட்டோம், இயற்கைப் புருவத்தை எடுத்தான பிறகு, கூட்டுப் புருவம், மிரட்டும் புருவம், எல்லாம் அமைத்துக்கொள்கிறோம்.

எனவேதான், தம்பி! தமிழ் மொழியில் காணக் கிடைக்கும், 'ஓசைநயம்'போன்ற எந்த எழிலையும் இழந்துவிடக்கூடாது என்று கூறிவருகிறோம்: அதேபோது, அந்த எழில் வேண்டும் என்பதற்காகவே, 'இட்டுக்கட்டியும்' 'இழுத்துக் குழைத்தும்' தரக்குறைவு ஏற்பட்டுவிடும்படியும் செய்துவிடக்கூடாது என்கிறோம். தமிழ், எழிலும் பயனும் அளித்திடும் இன்மொழியாகத் திகழ்வதன்பொருட்டு முந்தை நாளில் புலவர் பெருமக்கள் எடுத்துக்கொண்ட சீரிய முயற்சிகள் பலப்பல.

செதுமொழி சீத்த செவி செறுவாக
முதுமொழி நீராப் புலன் நாஉழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர

செவியில் பொல்லாத சொற்களே புகுவதில்லை.

செவிகளின் வழி பாய்வது சான்றோர் செய்யுட்களாம்!

நாவினையே ஏராகக்கொண்டு புலவர் உழுதுண்டனர்.

அவர் தம் மொழிகள் பழங்கதைகளாக இல்லை; புது மொழிகள் தந்தனர் — அவைதமை மக்கள் கொள்ளைகொண்டு உண்டனர்.

இத்துணைச் சிறப்புடன் புலவரும் அவர்தம் உழவின் பலனை உண்டு களித்த மக்களும் வாழ்ந்திருந்ததனால் நாம் இன்று ஓர் உயர் தனிச் செம்மொழிக்கு உரிமையாளரானோம், உலகிலே எத்துணையோ தேயங்கள், இத்தகு மொழி பெற்றோமில்லையே என்று வாடிக் கிடந்திடுவதனையும், பிறமொழிகளின் துணையினைத் தேடி அலைவதனையும் காண்கிறோம்.

கள்ளக் கடத்தலைக் குறித்திட 'இந்தி'யில் சொல்லொன்று கிடைக்காது திகைத்தனர் ஆட்சியாளர் என்றோர்செய்தி, கண்டோமல்லவா சின்னாட்களுக்கு முன்பு.

இயலாமையை இந்த அளவுக்குப் பெற்றுக்கிடக்கும் 'இந்தி' மொழிக்கு ஏற்றம் கிடைக்கிறது; தமிழ் இனத்துதித்தோரில் சிலர், அம்மொழி எம்மொழி என்றும் பேசிடக் கேட்கிறோம், கருத்தினை விளக்கிட எழுத்து ஒன்றுபோதும், ஈரெழுத்து மட்டும் போதும் பொருளிக்க, சிறுசிறு எழுத்து மாற்றங்கள் மூலமே, பொருள் மாற்றம் பெரிதும் காட்டிட இயலும், அதனையும் அழகுபட, ஓசை நயத்துடன் எடுத்துக்கூற முடியும் என்ற இத்துணைச் சிறப்புடன் தமிழ்மொழி இருந்திடக் காண்கிறோம், எனினும் அதற்கென்று ஓர் தனி இடம், உயரிய இடம், உரிமையான இடம், பெற்றளிக்கும் திறனுமற்றுக் கிடக்கிறோம்.

கானவன் யானைமீது வீசிய கவண்கல் வேங்கையின் பூவைச்சிதறி, ஆசினிமென் பழந்தை உதிர்த்து, தேனின் இறாலைத் துளைப்படுத்தி, மாவின் குலையை உழக்கி, வாழையின் மடலைக் கிழித்து, பலாவின் பழத்துட்சென்று தங்கும்.

குறிஞ்சிக் காட்சியினைக் கூறுகிறார் புலவர்.

இவ்வளவுதானே, உமது புலவர் பெருமகனால் கூற முடிகிறது; இதோ கேளும் எமது புராணிகர் கூறுவதை. எம்பெருமான் ஸ்ரீராமச்சந்திரருடைய கோதண்டத்திலிருந்து கிளம்பிய 'அஸ்திர'மானது, புயற்காற்றெனக் கிளம்பிச்சென்று, இராவணன் மார்பைத் துளைத்து, உயிரைக் குடித்து, அவன் உள்ளத்தில் எங்கெங்கு சீதாதேவி மீது காமக்கருத்து இருக்கிறது என்று தேடிப்பார்ப்பதுபோல உள்ளத்தைச் சல்லடை

யாகத் துளைத்து, பிறகு காரியம் வெற்றிகரமாக முடித்தான களிப்புடன், கடலிற்சென்று குளித்து கறை போக்கிக்கொண்டு, மீண்டும் பறந்து வந்து காகுத்தன் அம்புறாத் தூணியில் சேர்ந்தது, என்கிறார் நம்பெருமாள் ஐயங்கார்!

மொழி, வரிவடிவத்தால் மட்டுமல்ல, மொழி மூலம் தரப்படும் கருத்துக்களின் வகை மூலம், ஒன்றுக்கொன்று எவ்வளவு மாறுபட்டன, என்பது குறிஞ்சியைக் காட்டிய நந்தமிழ்ப் புலவர் தரும் பாவுடன், இராமனின் வீரத்தை விளக்கிட புராணீகன் தரும் ஆரியத்தினை ஒப்பிட்டுப் பார்த்தாலே விளங்கிவிடும்.

புராணீகனின் கருத்தினை மறுத்திடாமல், ஆய்ந்துபாராமல், ஏற்றுக்கொள்வதாயினும், இராமனுடைய 'தெய்வீகம்' வேண்டுமானால் விளங்குமே தவிர, பாநயமோ, இயற்கை உண்மையின் அழகோ அதிலே துளியும் கிடைக்காது. இராமனுடைய 'அஸ்திரம்' மட்டுமே புராணீகன் சொன்னபடி செய்ய முடியும்! குறிஞ்சி குறித்து பாடிய புலவன் காட்டும் கவண்கல் இருக்கிறதே தம்பி, அது நீயும் நானும், எடுத்து வீசினாலும் செய்யுளிலே காட்டப்படும் செயலைத்தான் முறைப்படி செய்யும்; அவ்வளவு இயற்கையோடுஎட்டியதாகக் கருத்தினைத் தந்துள்ளார் புலவர்.

பெரிதும், கண்ட காட்சிகளை காண்பதால் ஏற்படும் கருத்துடன் இணைத்துத்தருவதற்கே பண்டைத் தமிழ்ப்புலவர்கள் விரும்பினர்.

காடுகளையும் கானாறுகளையும்' ஓடைகளையும் அவைதமில் துள்ளும் மீன்களையும், குவளையையும் தாழையையும், யானையையும் பெடையையும், செங்கால்நாரையையும் கருங்குயிலையும், கடுவனையும் மந்தியையும், உதிர்ந்த பூக்களையும், உலர்ந்த தருக்களையும், பாய்ந்தோடும் அருவிகளையும், பட்டுப்போன மொட்டுக்களையும், காணும் போதெல்லாம் அவர்கட்கு,கருத்து ஊற்றெடுத்திருக்கிறது, அத்துணைக்கருத்தும், உண்மையோடு எட்டியவையாக, கேட்போர் மறுக்கொணு வகையினதாக, கேட்டு இன்புறத்தக்கதாக அமைகின்றன. இந்தச்சிறப்பு புலவர் தேடித்தந்தது; புராணிகன் தேடித்தருவது அஃதன்று.

கானவன் கவண் வீசுகிறான் தம்பி! துவக்கத்திலேயே, புலவர் கானவனைக் கவண் வீசச் சொல்கிறார், ஏனெனில் வீசவேண்டிய முறைப்படி அதற்கேற்ற பயிற்சி பெற்றநிலையிலுள்ளவன் வீசினாலல்லவா, கவண்கல் செய்யவேண்டியதைச் செம்மையுறச்செய்யும்.

தாக்க வந்தவனை, ஆட்டுகுட்டியைத் தூக்கி எறிவதுபோல எறிந்தான்—என்ற கருத்தை அளிக்க முற்பட்டால் மல்லன் என்ற சொல்லைக் கோர்த்தாக வேண்டுமல்லவா, ஏனெனில் மல்லன் செய்யக்கூடிய காரியமல்லவா, அது; அதுபோலத்தான், யானைமீது வீசவேண்டும் கல்லினை— எனவே புலவர், கானவனைத்தான் காட்டுகிறார்.

கானவன், கவண்கல் வீசுகிறான் யானைமீது!

புராணீகனுடைய கல் அல்ல அது; எனவே யானை சாகவில்லை, விரண்டோடிவிட்டது; வீசப்பட்ட கல்லோ வேங்கை மரத்தின்மீது உராய்ந்து செல்கிறது. வேகமாக, செல்வதால், பூத்துக் கிடக்கும் பூ சிதறுகிறது, கல் சென்றுகொண்டிருக்கிறது, ஆசினிப் பழத்தை உதிர்க்கிறது, தேன் அடை துளைக்கப்படுகிறது, மாவின் குலை தாக்கப்படுகிறது, வாழை மடலைக் கிழிக்கிறது, இறுதியாக பலாப் பழத்துட் சென்று தங்கிவிடுகிறது.

கல் செல்லும் வழியெலாம் ஒரு முறை கருத்தைச் செலுத்திப் பார் தம்பி, சுவையுள்ள இடம் சேருவாய், கல்லே, சுவைமிகும் பலாப் பழத்தை அல்லவா சென்று சேருகிறது

வீசப்பட்ட கல்லின் வேகம்' படிப்படியாகக் குறையும், வேகம் குறையக் குறைய, அதன் செயல்படும் வலிவும் குறையும் என்ற உண்மையை, யானைமீது வீசப்பட்ட கல், வேங்கை மரத்துப் பூக்களைச் சிதறச்செய்து, ஆசினிப் பழத்தை உதிரச்செய்து, தேன் அடையைத் துளைத்து, வாழை மடலைக் கிழித்து, இறுதியில் பலாவிடம் அடைக்கலம் புகுந்துவிடுவதாகக் கூறி விளக்கும் அழகினைப் பார். யானைமீதே கல் பட்டிருந்தால், கல் பிறகு யானைமீது மோதுண்ட காரணத்தால், மேலால் செல்லாது, கீழே 'தடும்' என விழும்; பிறகு வேங்கையும் ஆசினியும், மாவும் பிறவும், புலவர் தம் பாவினிலே வரத் தேவை ஏற்பட்டிராது.

வேங்கையின் மலர், ஆசினிப் பழம் இவற்றினைச்சிதறவும் விழவும் செய்தாரே தவிர, இதற்குள் கல்லின் வேகம் குறைந்துபோயிருக்கும் என்ற இயற்கை உண்மையை உணர்ந்தவராதலால், மாங்குலையின்மீது கல் பட்டபோது, உலுக்கிவிடும் அளவுக்கும், பிறகு வேகத்தால் கிடைக்கும் வலிவு கல்லுக்குக் குறைந்துவிடுவதால், வாழை மடலைக் கிழித்திடமட்டுமே இயலுமாகையால், அதனைமட்டும் கூறி, வேங்கை உயரத்துக்கு வேகமாக மேலெழும்பிய கவண் கல், பிறகு ஆசினி, மா, வாழை என்ற அளவுக்குக் கீழே இறங்கி, கடைசியில் பலாவில் சென்று தங்குகிறது— பழம், எனவே, கல் புக முடிந்தது, பலாப்பழம் எனவே அதற்குள்ளேயே ஒட்டிக்கொண்டுவிட்டது என்றார். தம்பி! இவ்வளவு இயற்கையோடிணைந்ததாகக் கவிதை தருகிறார்; செய்யுட் சுவையுடன்கூடவே செந்தமிழ்நாட்டு வளம் தெரிந்திடச் செய்கிறார்.

யானை உலவும் காடுகள்; அங்கு துணிவுடன் உலவும் கானவர்; அவர்கள் கவண் வீசும் திறம்; ஓங்கி வளர்ந்த வேங்கை மரம்; கனி தரும் மாவும் வாழையும் பலாவும், கானகத்தில்! இவ்வளவு வளம் தமிழகத்தில்; குறிஞ்சிமட்டுமல்ல, எந்த நிலம்பற்றிப் பாடினாலும், இதே முறை—உண்மையை அழகுபட உரைத்திடுவது; இல்லை, தம்பி உண்மையை உரைக்கிறார், அதிலே அழகு தவழ்ந்து வருகிறது!

இந்தத் 'தமிழ்' இனிமை பெற, 'இரவல்' எற்றுக்குப் பெறவேண்டும்? புள்ளிக் கலாபம் படைத்த மயிலுக்கு, வான்கோழிச் சிறகாலான தோகை தரவேண்டுமா! கிளி அழகுபெற, அதற்குப் பச்சை வண்ணம் பூசவேண்டுமா? கேட்கவேண்டாம் தம்பி! கோபிப்பர்! எண்ணிப்பார், அது போதும்!!

அன்பன்,

**அண்ணாத்துரை.**

# "சாக்கடை" கலக்கிறது

"பணத்தை விரயம் செய்வதற்காகவே இந்த இரண்டு இலாக்காக்கள் இருக்கின்றன. சுகாதாரம், கல்வி ஆகிய இரண்டினையும் மாகாணங்களே கவனித்துக்கொள்ளமுடியாதா? எதற்காக மத்தியசர்க்காரில் இரண்டுமந்திரிகள் இவைகளுக்காக! அநாவசியமாக, நாட்டின் வரிப்பணம் விரயமாவதாகவே கருதுகிறேன். அவசியமற்ற இந்த இரு இலாக்காக்களை எடுத்துவிட்டால், எவ்வளவோ பணம் மிச்சமாகும்"

டில்லிமேல்சபையிலே சாக்சேனு என்பார் இவ்வண்ணம் எடுத்துரைத்திருக்கிருர். சாக்சேனு, எதிர்க்கட்சிக்காரரல்ல! காங்கிரஸ்காரர்!!

மாகாணங்கள், சுகாதார, கல்வி விஷயங்களை கவனித்துக் கொள்ளும் போது டில்லியிலும் ஏன் இப்படி இரண்டு இலாக்காக்கள்? — என்று காரசாரமாகவே கேட்கிருர்.

அருமந்த தோழர் ஆசாதுக்கு ஒரு அமைச்சர் பதவி அளிக்கவேண்டுமே, அம்மணி ராஜகுமாரி அமிருதகவுரியை சும்மாயிருக்கச் செய்யமுடியுமோ என்பதற்காகவே இந்த இரண்டு இலாகாக்களையும், டில்லி, கட்டி அழுகிறது. ஒவ்வொரு மாகாணமும், இந்தப் பிரச்சனைகளுக்கெனப் பாடுபட அமைச்சர்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும்போது. ஏனிப்படி இலாக்காக்கள் டில்லியில்?—கேட்பவர் சாக்சேனு! அறிவும், யோசனைகூறும் ஆற்றலும் உள்ளவர் என்று காங்கிரசால் கருதப்படும் மேல்சபை உறுப்பினர்!!

இதோ இன்னொருவர் கேட்கிருர், பார்லிமெண்டில், "ரோம் தீப்பற்றி எரிந்த போது, நீரோமன்னன் பிடில் வாசித்துக்கொண்டிருந்தானுமே அதுபோல—மக்கள், மடிந்து கொண்டிருப்பதை அறிந்தும், 'இந்த மந்திரி சபை சும்மா இருந்தது" என்பதாக.

மக்கள் மாள்கிருர்கள் தினசரி! ஆனுல், அவர்கள் சாவதின் காரணம் கண்டு, போக்கவேண்டிய சுகாதார மந்திரி சபையோ, தூங்கிக்கொண்டிருந்தது, சுகமாக!! — என்கிருர், பண்டிட் தகூர்தாஸ் பர்க்கவா. இவரும் எதிர்க்கட்சியோ, எனக் கருதுவீர்கள். அல்ல அல்ல மாட்சிமைபொருந்திய காங்கிரஸ்காரர்தான் இவர்.

பார்க்கவா, பேசிமுடிந்தபிறகு, இன்னொரு பார்லிமெண்டு உறுப்பினர் கண்களில் அனல் கிளம்ப எழுந்து நின்று கர்ச்சித்திருக்கிருர், "மக்கள் மாண்டார்கள் என்ருல் சாதாரணமாகவா மாண்டார்கள்! ஐயோ, அதைச் சொல்லவும் மனம் கூசுகிறதே. உலக சரித்திரத்திலேயே இப்படி ஒரு ஊழல் நடைபெற்றது, இல்லை, நாடாளும் பெரிய சர்க்கார் இருக்கின்ற டில்லியிலேயே, எண்ணற்றவர்கள் அநியாயமாக அழிவதா? செச்சே!!" என்பதாக. இவரும் ஒரு காங்கிரஸ்காரர்தான்! பெயர், சத்திய நாராயண்சின்கா.

* * *

டில்லி, உலகுக்கே உன்னதப் போதனை பேசும் திருஇடம் என்று தெரிவிக்கப்படுகிறது — சீனத்துத் தூதுவரும் அமெரிக்கப் பிரதிநிதியும் ரஷ்யத் தூதருமாக உலக நாடுகளின் பிரநிநிதிகள் எல்லாம் அமர்ந்திருக்கிருர்கள் — விருடிக்கொருதரம் விருந்துபசாரம் வைத்தும் வேடிக்கைக் கேளிக்கைகளிலும் கலந்து கொண்டு விவேக போதனைகள் வழங்குகிருர், நேரு பண்டிதர். இந்திய பூபாகத்தை வாழவைக்க இருக்கும் திட்டக் கமிஷன் இருக்கிறது. இவ்வளவு வசதிகளும் வாய்ப்பும் இருக்கிற அம்மாபெரும் நகரில் செத்தார்கள் மக்கள். கார் விபத்திலோ, விமானம் விழுந்ததாலோ, குண்டுகள் எதுவும் குறி தவறி வெடித்ததாலோ அல்ல; வியாதியின் காரணமாக!

ஒருவர் இருவரல்ல, நூற்றுக்கணக்கானவர்கள் செத்து மடிந்தார்கள்; சுமார், 40,000 பேர் அந்நோய்க்கு ஆளாகி, அவதியுறுகிருர்கள்;

சாதாரண முனிசிபாலிடியார்கூட, ஊரில் அம்மை காலரா என்ருல் அதனைத் தடுத்து நிறுத்த ஓடோடி வேலை செய்வர்.

பெரியவர்கள் வாழும் டில்லியிலே, 'டெலிபோனில்' கூப்பிட்டுச் சொன்ருல் மருந்துபெற அமெரிக்காவுடனும் ரஷ்யாவுடனும் தொடர்புகொள்ளக் கூடிய டில்லிமா நகரிலே, மக்கள் நோயினின்றும் காக்கப்படவில்லை. செத்தார்கள்-ஒருநாள் இருநாளல்ல, பல நாட்கள் செத்துக்கொண்டே இருந்தார்கள்,

வந்த நோயை உடனே விரட்டாதது கூட அல்ல, இப்படி ஒரு நோய் வந்ததற்கே காரணம், ஆட்சிப் பொறுப்பிலிருப்போரின் அசிரத்தையாம்! அந்த இடம்தான் இன்னும் வேதனை தரக்கூடியது!

எதற்கும் ஆடாது அசையாது இருக்கும், இந்தக் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கே கடும் கோபம் வந்திருக்கிறதெனில், பிரச்னை, சாதாரணமானதா, என்ன!

குடி நீரில், சாக்கடை கலந்துவிட்டதாம்! மக்கள் குடிக்கிற தண்ணீரில், கழிவுப் பொருள்கள் நிரம்பிய சாக்கடைத் தண்ணீர், கலந்துவிட்டது. கொசுவும், மலமும், ஆஸ்பத்திரி அழுக்கும், அனைவருடைய கழிவுப் பொருள்களும் கலந்த சாக்கடை நீரை டில்லிமக்கள் குடிக்க நேர்ந்து விட்டது. அதன் காரணமாக அங்கு மஞ்சள்காமாலைநோய் பரவி பலரை பலிகொண்டுவிட்டது.

---

**முகப்பில்**

பிப்ரவரி 20க்கு முன்பு நாடெங்கும் மின்னல் வேகச் சுற்றுப்பயணம் செய்யக் கிளம்பிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியனும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசனும், திலப்படத்தை வைத்துக்கொண்டு பிரயாணத்திட்டம் தீட்டினர்கள், அறிவகத்தில். அந்தக் காட்சி, இது.

---

"சாக்கடையும் குடிநீரும் கலக்கக் காரணம், டில்லிக்கு ஓரமாக ஓடும் யமுனையில் அதிகம் வெள்ளம் வந்த தால் என்று அமிர்தகௌரி அம்மையார், 'அழகான காரணம் கண்டு பிடித்திருக்கிறோம்' எனும் கருத்தில், அறிவித்திருக்கிறார் சபையில். உடனே, ஒரு உறுப்பினர் எழுந்து "அதுசரி! வெள்ளத்தால் விளைந்தது இக்கேடு என்பதை எடுத்துக்கொள்கிறோம். ஆனால் அந்த வெள்ளத்தால் சாக்கடை நீர் மேலோங்கிவருகிறதென்றால் அந்த சாக்கடைநீரும் குடிநீரும் கலக்காமலிருக்க ஏன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக்கூடாது? இப்படிப்பட்ட அவசியமானநேரத்தில் இராணுவம்தான் எங்கேபோயிற்று?அதை உபயோகித்து தடுப்பு வேலைகளைச் செய்யலாமே?"என்றுகேட்டிருக்கிறார்.

அதற்குப் பதிலளிக்க எழுந்த பாதுகாப்பு மந்திரி கட்ஜு, "இப்படியொரு நிலை உண்டாகிவிட்டது என்று டில்லி கமிஷனிடமிருந்து எனது இலாகாவுக்கு 8ம் தேதியோ 9ம் தேதியோ அறிவிக்கப்பட்டது. அதற்குமேல் அது சம்பந்தமாகக் கவனிக்கப்பட்டது" என்று பூசி மெழுகியிருக்கிறார்.

உறுப்பினர் கேட்டது, ஏன் உடனடியாக இராணுவம் பணிபுரியச் சென்றிருக்கக்கூடாது என்று.

அமைச்சர், அறிவிப்பது அவர் வேண்டுகோள் அனுப்பினார், பிறகு கவனித்து ஆவன செய்யப்பட்டது என்பதாக.

இந்த அசிரத்தையின் விளைவாக அழிந்த உயிர்கள் நூற்றுக்கணக்கில்! அவதியடைந்தோர் தொகை ஆயிரமாயிரம்!!

இருந்தும் இதுபற்றிய தடுப்பு நடவடிக்கைகளும் சரி, மருத்துவ உதவிகளும் சரி காலாகாலத்தில் எடுக்கப்படவில்லை. இந்த லட்சணத்தில், இந்திய உபகண்டத்தையே ஆளும் சர்க்கார் இருக்கிற இடம் அது.

'மஞ்சள் காமாலை' மக்களைப் பலி கொண்டது—இன்னும் அதுபற்றிய அச்சமும்துயரமும் அடங்கியபாடில்லை.

இந்த ஒரு விஷயம்பற்றிக்கவனித்து உடனே இராணுவத்தினர் உதவியை நாடுவதோ வைத்திய நிபுணர்களின் உதவியை நாடுவதோபோன்ற நடவடிக்கைகளைக்கூட எடுக்க இயலாத சுகாதாரமந்திரி சபை ராஜினாமா செய்ய வேண்டும்—அது திறமையற்றது என்று நிருபணமாகிவிட்டது என்கிறார் காங்கிரஸ் உறுப்பினர்.

மற்றொருவர் "உலக சரித்திரத்திலேயே இப்படி யொரு ஊழல் நடைபெற்றது கிடையாது" என்று தெரிவிக்கிறார்.

வீடு எரிகிறது! மந்திரிசபை வீணை வாசித்துக்கொண்டிருக்கிறது! — என கர்ச்சிக்கிறார், வேறொருவர்.

மற்றொருவர் அடிப்படை பிரச்சினைக்கே போகிறார், ஏனய்யா இப்படி மத்யசர்க்காரில் சுகாதாரத்துக்கொரு மந்திரிசபையும் கல்விக்கொரு மந்திரி சபையும்? என்பதாக.

உண்மையில் இந்த இரு மந்திரிசபைகளும், தாம் என்ன வேலை செய்வதென்றே விளங்காமல் விழித்துக்கொண்டிருக்கின்றன.

ஏனெனில், நிதி இலாகா, வர்த்தக இலாகா, உள்நாட்டிலாகா என்பவைகளுக்காவது ஏதோ ஒரு பிடிப்பும்; பொறுப்பும் இருக்கிறது, மாகாண அமைச்சுகளிடம். ஆனால், இவைகளுக்கென்ன பொறுப்பு இருக்கிறது? எதற்காக இந்த இரண்டு வீண் இலாகாக்களும்?

மஞ்சள் காமாலை நோய்க்குக்கூட, உடனே நடவடிக்கை எடுக்க இயலவில்லை. ஏனெனில், டில்லியில்தான் ஒரு மாகாண மந்திரி சபை இருக்கிறதே, அங்கும் ஒரு சுகாதார மந்திரி இருக்கிறாரே, அவர் கவனித்துக் கொள்வார் என்று முதலில் இருந்திருக்கிறார்கள்; பிறகே, விபத்தின் விளைவு தெரிந்து ஏதோ சில செய்ய முயன்றிருக்கிறார்கள். அந்தச் சில முயற்சிகளையும் இவர்கள்தான் செய்யவேண்டுமென்பதல்ல; மாகாண நிர்வாகிகளே எடுத்துச் செய்யமுடியும்.

இப்படி, இரண்டுங்கெட்டான் நிலையில் இருப்பதால்தான், தக்க பதிலளிக்கமுடியாமல் தவிக்கிறார் ராஜகுமாரி அமிருதகௌரி! இத்தகைய நிலையில், ஏனிந்த இலாகா?

இதுபோலவே என்ன செய்வதென்று புரியாது, அடிக்கடி யோசனைகளையும் அல்லது அறிக்கைகளையும் விடுத்துக்கொண்டு அவதி யடைந்து கொண்டிருக்கும் இன்னொரு இலாகா அபுல்கலாம் ஆசாத் அவர்களுடையது.

இந்த இரண்டு இலாக்காக்களையும் ஒழித்துக் கட்டினால், எவ்வளவோ பணம் மிச்சமாகுமே என்கிறார், சாகசேனு.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களே, இப்படி சர்க்காரின் அநியாயச் செலவுகளை எடுத்துச் சொல்ல ஆரம்பித்திருக்கும் இந்த நேரத்தில் நேருவின் மந்திரிசபை என்ன யோசனை செய்து கொண்டிருக்கிறதாம், தெரியுமா?

சுமார் 200க்கு மேற்பட்ட திறமைசாலிகளைத் தேர்ந்தெடுத்து, வெளி நாடுகளுக்கு அனுப்பலாமா என்று ஆலோசிக்கிறதாம்.

வெளி நாடுகளுக்குத் தூதுவர்கள், அரசியல் அறிஞர்கள், கமிஷனர்கள் என்ற பெயரால் அழியும் நிதித் தொகையைக் குறித்து அறிஞர்கள் எடுத்துரைத்து வருகின்றனர்—அடிக்கடி.

நாட்டின் வரிப்பணம் கரியாகும் இடங்கள் என்று சர்க்காரின் கணக்குக் கமிட்டியே கண்டித்திருக்கிறது.

இருந்தும், இன்னும் பலர், அந்த வேலைக்கு உதவியாளர்களாகவும் அதிகாரிகளாகவும் நியமிக்கப்பட இருக்கிறார்களாம்!

இப்படியிருக்கிறது, டில்லியின் அரசு தர்பார்.

அதன் போக்கினை, காங்கிரஸ்காரர்களே இடித்துரைக்கிறார்கள்.

அப்படி இடித்துரைப்பதைக் கண்டாவது நாற்றம் குறையுமா என்று பார்த்தால், மென்மேலும் 'சாக்கடை'கள் கலக்கும் என்பதாகத்தான் செய்திகள் வருகின்றன.

★

## உரிமை வேட்கை

[முத்து]

வடநாட்டார் திமிரடக்கும் பெற்றி! வீரம்!
வகைவகை யாய்க்கலை வளர்க்கும் தனித்திறமை!
கடலலைபோல் எங்கெங்கும் மக்கட் கூட்டம்!
காணுகின்ற இடமெல்லாம் கருத்து மாற்றம்!

அடலேறு போலாண்மைச் சிங்கங்கள் கூடி
கொடிகட்டி வாழ்ந்த மக்கட் கொடுமைநீக்கி
சாக்காடு தனையணைத்த செந்தமிழர் கூட்டத்தைப்
பூக்காடு செலுத்துகின்ற புதுமைக் காட்சி!

வஞ்சத்தை வீழ்த்திவிட்டு வண்டமிழர் நாட்டில்
வாழ்விற்கு வழிகாட்டும் வளமான பண்பு!
நெஞ்சத்தில் ஈரமிலா நீசர்தம் சிறுவாழ்வு
நெறிகின்ற காட்சி! பெரியதோர் மாட்சி!

கட்சிபேதம் சமயவெறி களைந்துவிட்டு ஒன்றாய்க்
கலக்கின்ற இனிய காட்சி! புரட்சிப் பாடம்!
மருட்சிகொண்டு மறித்துவிழும் மாற்றார் நோக்கு
அழிவணைக்கும் அரசினரின் கடைசி மூச்சு!

பண்பற்றோர் கொள்கையினால் பறிபோகும் பகுதிகளை
மீட்பதற்குப் பல்லோரும் ஒன்றாகும் மாட்சி!
காணாத காட்சியிங்கே! கூட்டமைப்பு! கருத்துமாற்றம்!
கதையல்ல, தமிழினத்தின் உரிமை வேட்கை!

# கோவிந்தா ஆகிவிட்டது!

[அரங்கண்ணல்]

கோவிந்தா ஆகிவிட்டதாம்! நாம் போட்ட பல திட்டங்கள், கோவிந்தா ஆகிவிட்டதாம்.

இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தில் நமது மாகாணத்துக்கென போடப்பட்ட பல திட்டங்கள் கோவிந்தா ஆகிவிட்டதாம்.

கூறுகிறார் தோழர், பி. ராமமூர்த்தி—வியப்படையாதீர்கள், கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவராக விளங்கும் அவர்தான் வெளியிட்டிருக்கிறார், ஐயம் கொள்வோர் 11—3—56 ஜனசக்தி இதழின் 6-பக்கத்தினைப் பார்க்கக் கோருகிறோம்.

வடநாடு,தென்னாட்டை ஏமாற்றுகிறது-தொழில்கள் யாவும் வடக்கேதான்—தெற்குக்கு அநீதி இழைக்கப்படுகிறது, என்று ஆதாரங்களைச் சொரிந்து பேசினாலும், அதையெல்லாம் தேசியத் தேனைத் தடவி அடக்கிட முனையும் காங்கிரஸ் காரர்களைக் கண்டு கூட நாம் ஆச்சரியமடைவதில்லை. அவர்களைவிட, இந்த விஷயத்தில், அதி சிரத்தைகொண்டு விளங்குவோர் நமதரும் கம்யூனிஸ்டுத் தோழர்களாகும்.

அவர்களது ‘காம்ரேட்’ ஆதாரத்தோடு, சென்னை சட்டசபையில், குறிப்பிட்டாராம்— அப்போது, அவர் சொன்ன வாசகம், கோவிந்தா ஆகிவிட்டது என்பதாம்,

“......இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிக் குறிப்பிடும் பொழுது நமது சர்க்கார் மத்திய சர்க்காரிடம் ரூ. 398 கோடி ஒதுக்கும்படிக் கேட்டிருந்தும் ரூ. 261 கோடி தருவதாகக் கூறி இப்போது ரூ 170 கோடியாகக் குறைந்திருப்பதை எடுத்துக் காட்டினார். இதனால், என்ன ஆகுமோ என்று சந்தேகிக்க இடமிருக்கிறதென்றும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ரூ. 4 300 கோடி, ரூ. 4800 கோடிக்கு அதிகரிக்கப்பட்டும் நமது ராஜ்யத்திற்கு ரூ. 170-கோடியே கிடைக்கிறது இதனால் நாம் போட்ட பல திட்டங்கள் கோவிந்தா ஆகிவிட்டது என்றார்”

‘ஜனசக்தி,யின் வாசகங்கள், இவை. 4300-கோடியாகயிருந்த ஐந்தாண்டுத் திட்டத்தை ரூ 4800 கோடியாக அதிகரித்திருக்கிறார்கள். ஆயினும், நாம் கேட்டதொகை கிடைக்கவில்லை; குறைத்தே தரப்படவிருக்கிறது.

ரூ. 398-கோடி கேட்டோம், ரூ. 261-கோடி தருவதாகச் சொன்னார்கள், ஆனால் ஒதுக்கியிருப்பதோ ரூ. 170-கோடி.

சுப்ரமணியமும் பக்தவத்சலமும் பறந்துபோய், நேருவையும் இன்ன பிறரையும் பேட்டிகண்டு “எங்கள் தென்னாட்டில், வடநாடு வஞ்சிப்பதாக ஒரு புகார் இருக்கிறது. அந்தப் புகாருக்கு இடமளிக்காமலிருக்க, நீங்கள் இந்த உதவியைச் செய்துதானாகவேண்டும்” என்று மன்றாடிய பிறகும், கேட்டது, கிடைக்கவில்லை! குறைவாகவே தரப்படுகிறது.

இதனால், நாம் போட்ட பல திட்டங்கள் கோவிந்தா ஆகிவிட்டது என்கிறார், தோழர் ராமமூர்த்தி.

அவர் குரலில் தொனிக்கும் ஏமாற்றத்தையும், அது உணர்த்தும் பொருளையும், கவனிக்கவேண்டுகிறோம் நாட்டு மக்களை.

நம்மைப் பிரிவினை விரும்பிகள் என்று குற்றஞ்சாட்டி ஏசுவதற்கு என்னென்ன வார்த்தைகள் அகராதியிலுள்ளன, என்று தேடிடும் தோழர்கள் கம்யூனிஸ்டுகள். அவர்தம், தலைவர், ஈனஸ்வரத்தில வெளியிடுகிறார், “என்ன ஆகுமோ என்று சந்தேகிக்க” இடமிருப்பதாக.

என்ன ஆகும்? இப்படியே, ‘நாம் போட்ட பல திட்டங்கள் கோவிந்தா’ ஆகிக்கொண்டேயிருந்தால், நாடு பாலைவனமாகும். நாமெல்லாம், ஓடு எடுத்துக்கொண்டு ஓடவேண்டியதுதான், இருக்குமிடம் தேடி என் பசிக்கு அன்னம் இடுவோர் உண்டோ, என்று பல்லைக் காட்டிய வண்ணம்.

அந்தக் கதி வராமலிருப்பதற்காகத்தான், தனிநாடமைப்பை, நாம் வலியுறுத்துகிறோம். நமது வளத்தை, நாமே எடுத்து, நம்மை நாமே சரிபண்ணிக்கொண்டு வாழலாம் என்கிற எண்ணத்தில். அப்போது. “இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவோமே” என்கிற பாடலை, ஆனந்தத்தோடு, பாடலாம். உருக்கிய இரும்பு அதிகமானால் உத்திரபிரதேசத்துக்குத் தேவைப்பட்டால் அங்கோ அல்லது வங்கத்தார் வாங்க விரும்பினால் அவர்களுக்கோ அனுப்பிவிட்டு, ‘கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்பண்டம் காவிரியின் வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்” என்கிற பாரதியின் பாடலை, உணர்ச்சியோடு பாடலாம்.

ஆனால், அத்தகைய உறவு கூடாது — ஒட்டியிருந்தே அவதியடையவேண்டும், என்றன்றோ உரைக்கிறார்கள் தேசியத்தார்கள்! அவர்களுக்கு பின்னணி சங்கீதமாகவும் இருக்கிறார்கள் நமது கம்யூனிஸ்டுத் தோழர்கள்.

ஒருபோது, வடக்கு வஞ்சிக்கிறது என்று சொன்னால், சீறுவார் நமது நிதி அமைச்சர். ஆனால் இப்போது முழங்கால் தலையிலடிபட, டில்லிக்கு ஓடும்போது தெரிகிறது, நாம் கூறுவதிலுள்ள உண்மை.

இந்த நிலை, இவருக்குமட்டுமல்ல, இவருக்கு முன்பு ஆட்சியிலமர்ந்திருந்த ஓமாந்தூராருக்கும் ஏற்பட்டிருக்கிறது; குமாரசாமியாருக்கும் உண்டாகியிருக்கிறது; ஆச்சாரியாரும் அனுபவிக்காமல் போகவில்லை. அப்படிப்பட்ட நெருக்கடி வந்தபோது, ஒவ்வொருவரும், “ஆமாமாம், அவர்கள் சொல்லுவதிலும் நியாயம் இல்லாமலில்லை. இந்த வடநாட்டார், இப்படித்தான் அலட்சியம் செய்கிறார்கள்” என்று கூறி வேதனைப்படாமலில்லை.

இப்போது, கம்யூனிஸ்டுக் கட்சித் தோழர் இராமமூர்த்தி கூறுகிறார், “நாம் போட்ட திட்டங்கள் கோவிந்தா ஆகிவிட்டது” என்று.

சட்டசபையில், நமது கோவிந்தசாமியும், ஆத்தூர் சுப்ரமணியமும், திருவொற்றியூர் சண்முகமும் இன்னா பிற தோழர்களும் இது குறித்து, எடுத்துச் சொல்வதைவிட, தோழர் இராமமூர்த்தி கூறுகிறார் என்பதிலுள்ள பொருள் கூர்ந்து நோக்கவேண்டியதாகும்.

கம்யூனிஸ்டுக் கட்சிக்காரர்களும் கண்டிக்கிறார்கள்! அவர்களுக்கு நேர் எதிரிடத்திலே இருக்கக்கூடிய செட்டிநாட்டு பூபதி முத்தையாவும் எடுத்துரைக்கிறார், இம்மாதம் 2-ந் தேதியன்று. “வடக்குக்கு எதிராக நாங்கள் முழக்கமிடக் கூடாது என இந்திய

அரசாங்கம் விரும்பும் பட்சத்தில், தென்னுடும் தொழில் மயமாக்கப்படவேண்டும்" என்பதாக.

தோழர் முத்தையா, தொழில் துறையில் பூபதி, ஆட்சியினரின் தவறுகளை எடுத்துரைப்பதைவிட 'நகாசு' போட்டுக்கொண்டிருந்தால் இலாபமும் வசதியும் அதிகம் அவருக்கு. அப்படிப்பட்டவரும்,எச்சரிக்கிருர், நாங்களும் வடக்குக்கு எதிராக முழக்கமிடக்கூடாது என்ருல் தென்னுட்டைத் தொழில் மயமாக்கவேண்டும் என்று.

அதே தேதியில், ஆந்திர வர்த்தக சபையினர் இந்திய தொழில் நிதி உதவிக் கார்ப்பரேஷன் தலைவருக்குச் சென்னையில் நடாத்திய விருந்தளிப்பின்போது ஆந்திர வியாபாரி ஜே. வி. சோமயாஜலு என்பார் பேசியது இது.

**"தொழில் துறையில் பிற்போக்கா யுள்ள தென்னுட்டுக்கு உதவிகள் நல்க வேண்டும். தென்னுடு இயற்கைவளமும், கனிப்பொருட் செல்வமும் நிரம்பியதாக இருந்தாலும் தென்னுட்டில் தொழில் முன்னேற்றமே இல்லை. தெற்கு ஏழை நாடாக இருக்கும் நிலைமை மாற வேண்டும்.**

**தென்னிந்திய ராஜ்யங்களுக்கு கடந்த ஆண்டு தொழில் நிதி உதவிக் கார்ப்பரேஷன் செய்துள்ள உதவிநிதி 18-சத விகிதம் என்று அவர்களுடையஅறிக்கை தெரிவிக்கிறது. அதே சமயத்தில் பம்பாய்க்கு மட்டும் 32-சத விகித !உதவி அளிக்கப்பட்டிருக்கிறது! இப்படியில்லாமல் பாரபட்சமற்ற போக்குக் காட்டப் படவேண்டும்"**

பம்பாய்க்கு 32-சதவிகிதம்! அதே சமயத்தில் ஆந்திரம், கேரளம், மைசூர், சென்னை முதலிய ராஜ்யங்கள் அனைத்துக்கும் 18-சதவிகிதம் நிதி உதவி!!

பாரபட்சமற்ற போக்குக் காட்டப்படவேண்டும் என்கிருர் சோமயாஜுலு. இதைத்தான், டில்லி, ஓரவஞ்சனையுடன் நடக்கிறது என்று நாம் குறிப்பிட்டு வருகிருேம்.

கேட்டது 398-கோடி, கிடைத்தது 170-கோடி என்று புள்ளி விபரத்தோடு தெரிவிக்கிருர், அன்பர் இராமமூர்த்தி அதேசமயத்தில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கென்று வரையறுக்கப்பட்ட ரூ 4300-கோடி என்பது 4800 கோடியாக அதிகமாக்கப்பட்டிருக்கிறது எனவும் தெரிவிக்கிருர்.

அப்படி, அதிகமாக்கியும், ஏன் கேட்டது கிடைக்கவில்லை, சென்னைக்கு.

இதோ, ஒரு தகவல், பீகாரிலிருந்து வருகிறது. அங்கே, மாபெரும் அணைக்கட்டு ஒன்று கட்டிக்கொண்டிருக்கிருர்கள், பெயர் கோசி அணைக்கட்டு என்பது. அதற்காக ரூபாய் 37½ கோடி செலவிடுவதென்று திட்டம் போடப்பட்டது. மறந்து விடாதீர்கள் ரூபாய் 37 கோடியில் ஒரு அணைத்தேக்கம்! அது கட்ட ஆரம்பித்ததும், அந்தத்தொகை போதாதென்று கூறப்படவே, திட்டம் திருத்தப்பட்டு அந்தத்தேக்கத்துக்கென ரூபாய் 42 கோடி செலவிடுவதென்று டில்லி முடிவு செய்தது. 37, 42 ஆயிற்று! இப்போது, திட்டத்தை மீண்டும் புனராலோசனை செய்யவே, 42 போதாதென்று சொல்லி ரூபாய் 53 கோடி வரை செலவழிப்பதென்று முடிவு செய்யப்பட்டிருப்பதாகச் செய்தி வருகிறது. எங்கே, இது? இங்கல்ல, பீகாரில்!

37, 42 ஆகி; 42, 53 ஆகிக்கொண்டிருக்கிறது அங்கே!

இங்கே, 398, 170 ஆகிக் கொண்டிருக்கிறது!!

தான் மட்டும் போனல் விஷயத்தைச் சரியாக விளங்கச் செய்ய இயலாது எனக்கருதி பக்தவத்சலத்தையும் சுப்ரமணியத்தையும் அழைத்துக்கொண்டு காமராஜர் அடிக்கடி டில்லிக்குப் பறந்து சென்றபின்னும், 398 170ஆகிறது! தொகை, கிடைக்கவில்லை; நாமம் தீட்டப்படுகிறது, நெற்றியில்!!

இதோ, இந்த அலங்கோலத்தை அறிஞர் இலட்சுமணசாமியார், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், மேல்சபையில் 4-ந்தேதி, எடுத்துரைக்கிருர்,

"திட்டக்குழு உறுப்பினர்களைச் சந்திக்க வருமாறு சென்னை மந்திரிகள் அடிக்கடி அழைக்கப்படுகின்றனர்; எல்லா விஷயங்களுக்கும், சில்லரை விஷயங்களுக்குக் கூட டில்லிக்கு வருமாறு 'சம்மன்' செய்யப்படுகிருர்கள். இது கௌரவமானதாக எனக்குப்படவில்லை;சென்னை மந்திரிகள் சம நிலையுடன், உரிய அந்தஸ்துடன் நடத்தப்படுகிருர்கள் என்று எண்ணக்கூடியதாக இல்லை.

திட்டக் குழுவினர் இரண்டாம் திட்டத்தில் சென்னை மாநிலத்திற்குப் பணம் ஒதுக்குவதில் நடந்துகொண்டுள்ள முறை மிகத் துரதிர்ஷ்டமான ஒன்ருகும்.

பெரும் தொழில்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் சென்னைக்குத் தரப்பட்டிருக்கும் ரூ. 170-கோடி, மக்கள் தொகைக் கணக்குப்படி பார்த்தால் கூட எதிர்பார்த்ததில் சரிபாதி கூட இல்லை.

மத்திய சர்க்காரிடமிருந்து பிச்சைவாங்கும் முறை மிகத் தீங்கு பயக்கக்கூடிய ஒன்ருகும்; நமக்கு இழிவு தேடித்தரத் தக்கதாகும்"

சிறுவிஷயங்களுக்கும் சம்மன்!
சம அந்தஸ்து இல்லை.
சரிபாதிகூட இல்லை.
பிச்சை வாங்கும் முறை

டாக்டர் இலட்சுமணசாமியார், இவ்வண்ணம் உரைக்கிருர்! அவர், அரசியல் கட்சி எதனையும் சேர்ந்தவரல்ல; ஆயினும் இவ்வண்ணம், வேதனையுடன், எடுத்துச் சொல்கிருர்.

அவரென்ன, மாகாண மந்திரிகளை, டில்லிப்பீடம் எப்படி நடத்துகிறதென்பது குறித்து இதோ ஒருவர் கூறுகிருர்,

டில்லிப்பீடம், மாகாண மந்திரிகளை 'சப்ராசி'களைப் போல நடத்துகிறதாம்!

சப்ராசி, என்றதும் என்னமோ ஏதோ என்று கருதாதீர்கள்—கூறியவர் டில்லி மாநில மந்திரியாக இருக்கும் பிர்ம்மபிரகாஷ் என்பவர். அதனல் 'இந்தி' வார்த்தையில், 'பியூன்' என்பதற்குள்ள பதத்தை உபயோகித்திருக்கிருர்.

## மாகாண மந்திரிகளைப் பியூன்களைப்போல நடத்துகிறதாம், டில்லி!!

கூறுபவர், ஒரு வடக்கத்தி ஆள்! அவரே, இவ்வண்ணம் தெரிவிக்கிருரென்ருல், நமது மதியூக மந்திரிகளுக்கு அங்கு கிடைக்கும் மரியாதைகளை நாமேதான் யூகித்துக் கொள்ளவேண்டும்.

இந்த இலட்சணத்திலிருக்கிறது டில்லி! இதனல்தான், நாம் டில்லியிலிருந்து பிரிந்த தனிநாடு, வேண்டுமெனக் கோருகிருேம்.

அந்தக் கோரிக்கையை வலியுறுத்திப் பேசியபோது, வடக்காவது தெற்காவது, டில்லியாவது சென்னையாவது என்று சீறியவர்களில் ஒருவர்தான், நண்பர் இராமமூர்த்தி. அவரே, இன்று நாம் போட்ட திட்டங்கள் கோவிந்தாவாகிவிட்டன என்று குமுறுகிருர்.

இந்தக் குமுறல் அதிகமாக அதிகமாக, அப்போது நிச்சயம் அவரும் நம்மைப்போல, 'தனிநாடு வேண்டியதுதான்: நேசக்கரம் நீட்டி டில்லியோடு வாழ்வோம்; அடிமையாகக் கிடந்து அல்ல" என்று முழக்கமிடக்கூடும்.

அந்த நாள் வராது, என்று கம்யூனிஸ்டுத் தோழர்களின் போக்கைக் கவனிக்கும் யாரும், கூற முடியாது.

★

கருத்து மன்றம்

# தருமன் சால்பு

நாவலர் சோமசுந்தரபாரதியார் அவர்கள் 4-3-56 திராவிடநாடு இதழில் எழுதியுள்ள ஆராய்ச்சிக்கட்டுரையில் தருமன் மண்ணையும் பெண்ணையும் கொண்டவன் என்பதைத் தக்க ஆதாரங்களோடு விளக்கியுள்ளார்கள்.

கட்டுரையின் ஆரம்பத்தில், "பண்டிதரும் பாமரரும் தருமனைப் புகழ்ந்தும் துரியோதனனை இகழ்ந்தும் வருகின்றனர்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். பழமைக்குட்டையில் ஊறிப்போன பண்டிதர்களின் நிலை எப்படியோ இருக்கட்டும்; பாரதக் கதை நடந்ததாகக் கூறப்படும் பகுதியில் வாழ்கின்ற பழங்குடி மக்களில் ஒரு பிரிவினர், பாண்டவரை அசுரராக இழித்தும், துரியோதனனைத் தங்களுடைய குலதெய்வமாகவும் கொண்டு வழிபட்டு வருகிறார்கள் என்ற உண்மையை உத்தரப்பிரதேச கவர்னரும், வடமொழி வல்லுனருமான திரு. முன்ஷி அவர்கள், சமீபத்தில் 'பவான்ஸ் ஜர்னல்' என்ற பத்திரிகையில் எழுதியுள்ள ஆங்கிலக் கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்கள்.

"The most intriguing parts, of these areas are the few villages called Fateh-parvat in the upper Rawin of Jaunpur in the Tehri-Garhwal district, Their presiding deity is Duryodhan. He is the god and king of the people and is offered tribute. Here his enemies, the Pandavas are the demons...... Duryodhan life was highly Political-minded and even as a god, his tastes have remained unchanged. During the last general elections, party organisers approached the headman of these villages for vote......... The pujari invoked Duryodhan, who through the thani (ie the agent of the god) Commanded that all the votes should be cast for a particular Candidate."

"டெஹ்ரி கார்வால் ஜில்லாவில் மூனையைக் குழப்பும் வகையில் சில கிராமங்கள் காணப்படுகின்றன. அந்தக் கிராமங்களில் வசிக்கும் மக்களுக்குக் குலதெய்வம் துரியோதனன்! அவனைக் கடவுளாகவும் வேந்தனாகவும் வழிபட்டு மக்கள் காணிக்கை செலுத்துகின்றனர். இப்பகுதியில் துரியோதனனுக்கு எதிரியான பாண்டவர்கள் அசுரர்களாக மதிக்கப்படுகின்றனர். துரியோதனன் அவன் வாழ்க்கையில் அரசியல் நோக்கமுடையவனாகவே இருந்தான். கடவுளாக இருக்கும் நிலையிலும் அவனுடைய ஆசைகள் மாறாமலே இருக்கின்றன. போன பொதுத் தேர்தலின்போது கட்சிக்காரர்கள் கிராமத் தலைவனை அணுகி ஓட்டுக் கேட்டார்கள்...... பூசாரி, துரியோதனனை வேண்டினன். துரியோதனனும் தன்னுடைய 'பிரதிநிதி' ஒருவன் மேல் சாமியாக வந்து, எல்லா ஓட்டுக்களும் ஒரு குறிப்பிட்ட அபேட்சகருக்கே போடும்படி கட்டளையிட்டான்."

ஆரியக் கலாச்சாரம் ஆட்சி புரியும் வடக்கேகூட ஓட்டுப்போடும் உரிமையை நிர்ணயிக்கும் அள

பி. சி. கணேசன் B.Sc., B.T.,

விற்கு துரியோதனனுக்கு கடவுட்தன்மை கற்பிக்கப்பட்டிருக்கிறது. முன்ஷியார் எழுதிய கட்டுரைப்படி, ஒரு பகுதியில் துரியோதனதியர் அசுரர்களாகவும் மற்றொரு பகுதியில் பாண்டவர்கள் அசுரர்களாகவும் மதிக்கப்படுகின்றனர். விரும்புகின்றோரைத் தெய்வமாகவும், விரும்பாதோரை அசுரராகவும் ஆக்கி மகிழும் பண்பு மக்களிடம் இருந்து வருகிறது என்பதை உத்தரப்பிரதேச கவர்னரின் கட்டுரை தெளிவுபடுத்துகிறது. ஆகவே, இயற்கையில் தேவர்—அசுரர் என்ற பிரிவினை ஏதுமில்லையென்பதும் புலனாகிறது. செய்கைகளால் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, துரியோதனனே உயர்ந்தவன் என்ற பாரதியாரின் கருத்தை, வடநாட்டுப் பழங்குடி மக்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்பதற்குத் முன்ஷியின் கட்டுரை நல்லதொரு சான்றாகும்.

மேலும் திரு. முன்ஷி எழுதுகிறார்,

"When kunti enjoined that all the five brothers should take Draupadi as their Common wife—a flagrantly unorthodox affair in Aryavarta—she may have been following the custom of the Himalayan regions where she had lived with her husband"

"குந்தி, ஐந்து சகோதரர்களையும் திரௌபதியைப் பொது மனைவியாக ஏற்றுக்கொள்ளும்படி கட்டளையிட்டபொழுது — ஆரிய வர்த்தத்தில் இது ஒரு பயங்கரமான அனுச்சார விஷயம்—அவள் தன் கணவனோடு வசித்துவந்த இமயமலைப் பிரதேச வழக்கத்தைப் பின்பற்றி இருக்கக் கூடும்"

இமயமலைப் பிரதேசத்தில் ஒரு பெண் பல கணவன்மார்களோடு வாழ்ந்த பழக்கத்தை ஆரிய வர்த்தத்தில் குந்திதான் இறக்குமதி செய்தாள் என்பதை திரு. முன்ஷி, ஒப்புக்கொள்ளுகிறார். கர்ணனிடம் குந்தி வரம் பெற்ற முறை, ஒரு பெண்ணை ஐவருக்குத் தாரமாக்கிய முறை குந்தியை ஒரு கண்ணியமற்ற பெண்ணாகவே காட்டுகின்றன. இமயமலைப் பிராந்தியத்தில் தான் கண்ட பழக்கத்தை — அருவருக்கத்தக்க பழக்கத்தைத் தன் மைந்தர்களைச் செய்யும்படி குந்தி தூண்டினாள் என்பது, அவள் அப்பழக்கத்தை விரும்பி ஆதரித்தாள் என்றுதானே பொருள்படுகிறது.

நாவலர் பாரதியார், திரௌபதியை ஐவரும் பகிர்ந்து அனுபவித்தற்குத் தருமனை மட்டும் பொறுப்பாக்குகிறார். திரு. முன்ஷி குந்தியும் அதற்கு உடந்தை என்பதற்கு ஆதாரம் தருகிறார். இதிகாசங்களும் புராணங்களும் ஒழுக்கத்தை வளர்க்கப் பயன்படாது என்ற நம்முடைய முடிவு ஊர்ஜிதம் பெறுகிறது. ★

சிறு பித்தானை அமுக்கினல், அமெரிக்கா
விலிருந்து ஆபிரிகாவரை, ஐச்னேவரின் குரல்
முதற்கொண்டு ஆச்சாரியார் பேச்சுவரை
இருந்த இடத்திலிருந்து கேட்க முடிகிறதல்
லவா, 'ரேடியோ' பெட்டிமூலம். இதனைக் கண்டு
பிடித்தவர், ஈசனையும் சிவகாமி நேசனையும் அல
மேலு மங்கையையும் ஐய்யனரப்பனையும், கின்ன
ரர் கிம்புருடர், முப்பத்து முக்கோடி தேவர்களை
யும் கும்பிடும் இங்கல்ல; இத்தாலியைச் சேர்ந்
தவர். தந்தை, இத்தாலி—தாய் ஒரு ஐரிஷ்
மாது. அவர்களுக்குப் பிறந்த மார்க்கோனி, இந்த
அதிசய ஆராய்ச்சியைக் கண்டுபிடித்தமைக்
காகச் சுட்டுக்கொல்லப்பட இருந்
தார்! இப்படி ஒரு ஒப்பற்ற சாதனை
யைச் செய்திருக்கிருரே என்று
உலக முழுமையும் வியந்துகொண்
டிருந்த நேரத்தில், 'உருப்படாத
காரியம். உடனே, இவனை ஒழிக்க
வேண்டும்' என்றும் முயற்சி செய்
தனர். ஒரு ஜெர்மானியன், "ஏ!
மார்க்கோனி இங்கிலாந்துக்குவந்து
நேரே உன்னைச் சுட்டுத் தள்ளின
லொழிய என் ஆத்திரம் தீராது"
என்று கடிதம் தீட்டினன். உலகி
லேயே துப்பறிவதில்மிகவும் பெயர்
பெற்றவர்களென்று கூறப்படும்
'ஸ்காட்லாந்துயார்டு' போலீசார்
வசம் கடிதம் ஒப்படைக்கப்பட்டு; அப்படியொரு
வன் வராதவாறு கண்காணிப்பு தேடவேண்டிய
அவசியம் ஏற்பட்டது, இந்த அறிஞனுக்கு.



*

உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதி
லும் அச்சமில்லை!—என்று பாடுகிருமல்லவா?
அப்படி, வானம் என்று ஒன்று உள்ளதா, என்
ருல் இல்லையென்பதுதான் ஆராய்ச்சியாளர்
முடிவு. மேலே மூலோகம், கீழே மூலோகம் என்று
நமது புராணீகர்கள் பிரமாதமாக வர்ணிப்பார்
கள். ஆகாயத்தைப்பற்றிய உண்மை தெரியாத
காரணத்தால், பூமியைச் சூழ்ந்திருக்கும் ஒரு
கூரைபோன்றது ஆகாயம் என்று கருதி,
அதற்கு மேலும் உலகங்களிருப்பதாக எண்ணி
விட்டார்கள், நமது முன்னேர்கள். அது, அல்ல
உண்மை என்று விஞ்ஞானிகள் கூறுகிருர்கள்.
அதற்கு பற்பல ஆதாரங்களையும் காட்டுகிருர்
கள. அந்த ஆதாரங்களைப் படித்தும் பழைய
வாதத்தை நிலைநிறுத்த பிரயாசைப்படும் 'ஆச்
சாரியார்'களைப்பற்றி நமக்கு அக்கரையில்லை.
ஆனல், அப்படிப்பட்ட ஆதாரங்கள் பலரை
சிந்தனைச் சிற்பிகளாக்கிற்று. உலகம் மறக்கமுடி
யாத சிந்தனைச் சிற்பிகளில் ஒருவர் மார்க்
கோனி.

*

இங்கிருந்து கூவினல் இன்னெரு மூலையில்
ஒலி எழும்புகிறது. அது, எப்படி? நம்முடைய
குரலைக் காற்று தூக்கிச் செல்வதால்! குரல்
வலுக்க வலுக்க அது கேட்கும் தூரமும் அதிக
மாகிறது. எப்படி கடலில் அலைகள் வருகிறதோ
அதுபோல காற்றலைகளும் நமது கண்ணுக்குப்
புலப்படாதவாறு இருந்துகொண்டுள்ளன.
இவைகளின் மூலம், குரலொலியை வெகுதூரம்
கேட்கச் செய்யமுடியும்! ஒலியை மட்டுமல்ல,
ஒளியைக்கூடப் பார்க்கச்செய்யமுடியும்!—எனறு,
இன்று நிரூபிக்கப்பட்டுவிட்டது. ஒலியையும்
ஒளியையும் மின்சார அலைகள் மூலம் காற்றிலே
பரப்பிவிட்டால், 'ரேடியோ' மூலம், நாம் கேட்
கலாம்; 'டெலிவிஷன்' மூலம், பார்க்கலாம், இப்
படி மின்சார அலைகள் மூலம் அரிய சாதனை
யைச் செய்ய முடியும் என்று மார்
கோனி சொன்னதும், ஏன் எதிர்ப்பு
கிளம்பிற்றும் தெரியுமா?

*

"மின்சார அலைகள் காற்றில் பர
வினல் என்ன ஆகும்?" என்றுன்
ஒருவன்.

"ஆமாமாம்! மனிதனுடைய
உடலையும் பாதிக்கும் என்றுன்"
இன்னெருவன்.

"அது கெடுதல்தானே!"

"ஆமாம்!"

"அப்படியானல், இந்த மார்க்
கோனியைச் சும்மா விடலாமா?
கர்த்தர் அருளிய உயிரைச் சிதைக்க இவன்
யார்!" என்று வெறியர்கள் முழைத்தார்களாம்.
அவர்களில் ஒருவன்தான், மார்க்கோனியைக்
கொல்லப் போவதாக மிரட்டியவன். ஆனல்,
அந்த வெறியர்கள் பிரச்சாரம் பொய்யாகி,
விந்தை செய்த வித்தகர் என்று இன்று மார்க்
கோனி புகழப்படுகிருர்.

*

இந்தப் புகழைப் பெற, அல்லும் பகலும்
ஆராய்ச்சி செய்தவண்ணம், அவர்கிடந்த
பொழுது, அன்னை, தந்தை முதல் உற்ருர் உற
வினர்வரை என்ன சொன்னர்களாம், தெரியுமா?
பைத்யக்காரன்! படித்துவிட்டு உத்யோகத்துக்
குப் போகாமல் உதவாக்கரையாகத் திரிகிருன்!
ஆராய்ச்சி, ஆராயச்சி என்று அலைகிருன்!—
இதுதான், அவர் பெற்ற, பரிசுகள். ஆனல்,
முதன் முதலில், ஆராய்ச்சியில் அவர் வெற்றி
பெற்றதும்—அப்போது வயது என்ன தெரியுமா?
27!!—யாரார் இகழ்ந்தனரோ அத்தனைபேரும்
ஓடிவந்து அவரைக் கட்டிக்கொண்டு ஆனந்தக்
கூத்தாடினராம்.

புதுமை காண விரும்பிய யாரைத்தான்
முதலில், உலகம் கேலிசெய்யாமலிருந்தது.
அதிக தூரம் போவானேன், அறிவியக்கத்தாரா
கிய நாம் ஆரம்ப காலத்தில் தாங்கவேண்டி
யிருந்த ஏச்சுக்கும் பேச்சுக்கும், இன்றுள்ள
நிலைமைக்குமிடையிலே கூட வித்தியாசம்
இருக்கவில்லையா? "வண்டு"

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.